பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 20 சனிக்கிழமை (04.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் இனங்காணப்பட்ட

## கொரோனா நோயாளியால் சமூகத் தொற்று அபாயமில்லை




சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க

05

கட்டுப்பாடுகளுடன் சிறப்பாக இடம்பெற்ற

## நயினைத் தாயின் இரத உற்சவம்



23

ஆட்ட நிர்ணயம் இடம்பெறவில்லை

## விசாரணைகள் இனி தொடராது என அறிவிப்பு

(கொழும்பு)

2011 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதா? என்பதை ஆராய நடத்தப்பட்ட விசாரணைகளில், அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்பதை கண்டறிந்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதனால், விசாரணைகள் இனித் தொடராது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2011 உலகக் 23

## ரணிலிடம் 4 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணைக்காகச் சென்ற நிலையில்,

ரணில் விக்கிரம 23



6 மணித்தியாலங்கள்

## மாணவர்கள் முகக்கவசம் அணிந்தால் ஆபத்து

7ம் பக்கம் பார்க்க

மதத் தலங்களில் பரப்புரை செய்தால்

# வெற்றி பெற்றாலும் வாக்குகள் இரத்தாகும்

## மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை



(கொழும்பு)

எந்தவொரு வேட்பாளராவது மதத் தலங்களில் பரப்புரை செய்தால் குறித்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அவரது வாக்குகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த 23

2011 உலகக் கிண்ணத்தில்

## ஆட்ட நிர்ணயத்துக்கு ஆதாரமில்லை

சர்வதேச கிரிக்கெட் சபை

(கொழும்பு)

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை - இந்தியா மோதிய இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதற்கான ஆதாரமில்லை 23

## அழுத்தங்களுக்கு அடி பணியாது உரிய கடமைகளைச் செய்க

பொலிஸாருக்கு பாதுகாப்புச் செயலாளர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது பொலிஸார் தமது கடமைகளை உரியவாறு செய்ய வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண அறிவுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள் 23

## மண்டைதீவு கடற்பரப்பில் 421 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பரப்பில் 421 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகள் நேற்றுக் காலை கடற்படையினரால் கைப்



23

யாழைச் சேர்ந்தவர்

## கொரோனா வைரஸால் பிரான்ஸில் உயிரிழப்பு



(பாரிஸ்)

கொரோனா தொற்றிற்கு இலக்காகி, பிரான்சில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மல்லாகத்தை சேர்ந்த 23

சுன்னாகத்தில்

## சந்தேக நபர் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது 23

புலனாய்வு எனத் தெரிவித்து

## கடத்தல்காரர்களிடமிருந்து கஞ்சா பறிமுதல் செய்து

விற்பனை செய்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சின்ன மலை ஏற்றத்தில் 25 கிலோ கிராம் கஞ்சா 23

# பொன்னாலை பாலத்தில் கடலுக்குள் பாய்ந்த வடி

(குப்பிழான்)

பொன்னாலைப் பாலத்தில் பயணித்த வடி ரக வாகனம் திடீரென வேகக்கட்டுப் பாட்டையிழந்து கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் நடந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் நீர் வழங்கல் அதிகார சபையின் நீர் விநியோகக் குழாயில் வடி ரக வாகனம் பொறுத்துக் கொண்டமையால் தெய்வா தீனமாக எந்த விதமான உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை, காரை நகரிலிருந்து பொன்னாலை நோக் கிப் பயணித்த வடி ரக வாகனமே இவ்வாறு விபத்தில் சிக் கியுள்ளது. (ம-3,18)

# கிழக்கு மாகாண தேர்தல் பிரசாரக் களத்தில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்

## கட்சியின் உப செயலாளர் சிற்பரனும் பங்கேற்பு





(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசாரத்திற்காக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கிழக்கு மாகாணத்தில் களமிறங்கியுள்ளார்.

இவருடன் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான தவச்செல்வம் சிற்பரனும் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பிரசாரத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஒற்றுமையின் அவசியத்தை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம - 3)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலால் நடாத்தப்படும் உடல், உள, உயிர் வளத்திற்கான ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய ஆரம்பிக்கப் படவுள்ளதால் இந்த அரிய வாய்ப்பினைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சி
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

**காலம்** :04.07.2020 சனிக்கிழமை தொடக்கம் 10.07.2020 வெள்ளிக்கிழமை வரை

**நேரம்** : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை

குறிப்பு : கொவிட் – 19 சமூக் பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

**தொடர்புகளிற்கு :**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 2772

(C-9826)


# அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் குற்றத்தில் ஈடுபடுவோரின் பட்டியல் அனுப்பி வைப்பு


(கொழும்பு)

உள்ளூரில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச புலனாய்வு பிரிவு வழங்கிய பட்டியல் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த பட்டியலின் அடிப்படையில் கடந்த வாரம் 82 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். (ம-3)

# மரண அறிவித்தல்



## கந்தையா கனகசபை

### (ஓய்வு பெற்ற முகாமையாளர்–இலங்கை வங்கி)

கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் இல.374, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை நேற்று (03.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற இராசையா - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சுசீலாவின் அன்புக் கணவரும் நிசாந்தனின் (Virtusa) அன்பு அப்பாவும் பிரசாந்தியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்) அன்பு மாமனாரும் ஆதனியாவின் பாசமிகு தாத்தாவும் அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரி, மகேஸ்வரி மற்றும் சிவபாக்கியம், சிவஞ்ஞானம், சிவயோகம், ஞானேஸ்வரி, புவனேஸ்வரி (ஓய்வு பெற்ற தாதி - தெல்லிப்பளை), ஜெகதீஸ்வரி (ஓய்வு பெற்ற மருத்துவர்-அம்பாறை) ஆகியோரின் சகோதரரும் செல்வராஜா, யோகராஜா, மற்றும் காலஞ்சென்ற தவராஜா, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சுந்தரம், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பெரியதம்பி (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்), பாலசுப்பிரமணியம், தர்மரட்ணம் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்), சலீம் (பத்திரிகையாளர்), விமலா, ரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பவானி (வவுனியா வைத்தியசாலை), சாமினி சந்திரமோகன், சந்திரமாலா, சந்திரசேகர், சந்திரசீலன், பிரேமிலா, சாந்தமாலா, வசந்தமாலா, ஜெயந்திரன், சுகந்தமாலா, நிரஞ்சனாதேவி (கல்வியற் கல்லூரி-வவுனியா), இளங்குமாரன் (ATI - வவுனியா) ஜனார்த்தனன், ஜனனி, கஜானன் (Esoft), வேணுகானன் (இலங்கை வங்கி), சித்தார்த் (இலங்கை வங்கி), சக்தி (மாணவி-USJ), அகீலா (Fastreact), அகீல் (Virtusa), காயத்திரி, கஜேந்தினி, கஸ்தூரி, தீபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சண்முகம் மாணிக்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - வவுனியா) அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மு.ப 10.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18-03-1946 | 03-07-2020 |

077 112 7614

021 222 6505


தகவல்: **குடும்பத்தினர்**

(3198)

# எனது பேச்சை அணுகுண்டாய் மாற்றியவர்

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்

## என்னைச்சீண்ட வேண்டாம் என கருணா எச்சரிக்கை



(கொழும்பு)

**அம்பாறை பகுதியில் தெரிவித்த கருத்தை சஜித் பிரேமதாஸவே தூண்டிவிட்டதாக கருணா வெளிப்படுத்தியுள்ளார்.**



மட்டக்களப்பு வந்தாறு மூலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே கருணா இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பில் குறைந்தது ஒரு பிரதிநிதித்துவமாவது வழங்கப்பட வேண்டும் என அரசிடம் கோருகின்றோம்.

அண்மையில் நான் தெரிவித்த கருத்து அதாவது 30 செக்கன் காணொளி உலகம் முழுவதும் அணு குண்டு வெடித்தது போல் இருந்தது.

எல்லா ஊடகங்களும் அதை ஒளி, ஒலி பரப்பின. உண்மையில் நான் பொதுப் பிரச்சினையைப் பேசினேன். அதாவது யுத்தத்தில் இழப்புகள் ஏற்பட்டது உண்மை. இனிமேல் அவ்வாறான இழப்புகள் தேவையில்லை என்றே நான் பேசினேன்.

அதை சஜித் பிரேமதாஸ செம்மை செய்து பிரசாரம் செய்தார். இறுதியில் அவர் தலையில் அவரே மண்ணை போட்டுக்கொண்டார். துப்பாக்கி உள்ளிட்டவைகளை தந்து 25 கோடிக்கும் அதிகமான பணத்தையும் தந்து இயக்கத்தை வளர்த்தது உங்கள் தந்தை என நான் தெரிவித்தேன்.

இதனால் அவருக்கு சிங்கள மக்கள் மத்தியில் போக முடியாது போய்விட்டது. கருணாவை சீண்டினால் பிரச்சினையாகும் என்பது அவருக்கு தற்போது விளங்கியுள்ளது என அவர் தெரிவித்தார். (ஐ-4)

---

## அவன்கார்ட் விவகாரம்

# ராஜித 200 இலட்சம் ரூபாய் கப்பம் பெற்றதற்கான ஆதாரம் வெளியானது

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன 2015 ஆம் ஆண்டு அவன்கார்ட் ஊடாக பெற்றுக்கொண்டதாக கூறப்படும் 200 இலட்சம் ரூபாய் காசோலை தொடர்பான ஆதாரங்களை கொழும்பில் பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளராக களமிறங்கியுள்ள விஜயதாஸ ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனம் தொடர்பாக தன்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன சவால் விடுத்திருந்தார். அதற்கமையவே அவர் இந்த ஆதாரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.



இந்த விடயம் தொடர்பாக விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளதாவது, "அவன்கார்ட் நிறுவனம், ராஜித சேனாரட்னவுக்கு 200 இலட்சம் ரூபாய் கப்பமாக கொடுத்ததாக அதன் உரிமையாளர் என்னிடம் கூறினார்.

எனவே, அவ்விடயம் தொடர்பான ஆதாரங்கள் இருந்தால் தருமாறு உரிமையாளரிடம் கோரியிருந்தேன். அந்த ஆவணங்களே இவைகளாகும்.

அதாவது கடந்த 2015 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 11 ஆம் திகதி 50 இலட்சம் ரூபாய் வழங்கிய காசோலை எம்மிடம் இருக்கின்றது.

அதேபோன்று மற்றுமொரு 50 இலட்சம் ரூபாய்க்கான ஆதாரங்கள் மற்றும் குறித்த காசோலையை வங்கியில் மாற்றியமைக்கான ஆதாரங்களே இவைகளாகும்" என அவர் தெரிவித்தார். (ஐ-4)

---

# பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிரடியாக இடமாற்றம்

(கொழும்பு)

20 உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிரடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவரும் உள்ளடங்குகிறார்கள்.

தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் இந்த இடமாற்றங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

9 பதில் பிரதி பொலிஸ்மா அதிபர்கள், 6 சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்கள், 2 பிரதி பொலிஸ் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டவர்களே இடமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் புதிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.அபோன்ஸோவின் இடமாற்றமும் இதில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

---

# குணமடைந்தோர் 1863

(கொழும்பு)


நாட்டில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 36 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 66 பேரில் ஆயிரத்து 863 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும், 192 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன், இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

---

# ஐ.நா.மனித உரிமைப்பேரவையில் இலங்கை குறித்த அறிக்கை மீது விவாதம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 44 ஆவது கூட்டத்தொடர் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில், இலங்கை தொடர்பான விவாதம் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு கடந்த வருடம் விஜயம் செய்த சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணரின் அறிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் வெளியிடப்படவுள்ளது.

அதன் பின்னரே இலங்கை குறித்த விவாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

முதலில் விசேட நிபுணர் இலங்கை குறித்த அறிக்கையின் சாராம்சத்தை வெளியிடுவார். ஏற்கனவே விசேட நிபுணரின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதன் சாராம்சம் சபையில் வெளியிடப்பட்டதும் விவாதம் ஆரம்பமாகும். (ஐ-8)

---

# மின்சாரம் தாக்கியதில் இரு விவசாயிகள் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு உன்னிச்சை வயல் பிரதேசத்தில் யானைகளில் இருந்து வேளாண்மையை பாதுகாக்க அமைக்கப்பட்ட மின்சார வேலியின் மின்சாரம் தாக்கியதில் வேளாண்மை காவலில் இருந்த இரு விவசாயிகள் உயிரிழந்தனர்.**

**குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது. இவர்களது சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)**

# ஒன்றினை அழிப்பது மட்டும்தான் வன்முறை அல்ல அதனை பாதுகாக்காமல் அழிய விடுவதும் வன்முறையே!

## வரதராஜன் பார்த்தீபன் முழக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தொல்லியல் திணைக்களத்தால் 13 அடையாளப்படுத்தப்பட்ட இடங்கள் உள்ளன. அவ் இடங்களில் மிக முக்கியமானது மந்திரி அரண்மனை. ஏனெனில், மந்திரிமனை என்பது தொல்லியல் சார்ந்த இடம் என்பதற்கு அப்பால் தமிழர்களின் இருப்பினை அடையாளப்படுத்துகின்ற, ஆவணப்படுத்துகின்ற ஒரு மரவுரிமை சின்னமாகும்.

அவ்வாறான தமிழரின் மிக முக்கியமான இவ் மரவுரிமைச் சின்னமானது தற்போது சமூக சீர்கேடுகள் நடைபெறுகின்ற இடமாகவும் கால்நடைகளைக் கட்டுகின்ற இடமாகவும் காணப்படுகின்றது என மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மாநகர அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து, எமது பாரம்பரிய நிலங்களை தொல்லியல் சட்டங்கள் மூலம் பலவந்தமாக கையகப்படுத்துகின்ற தொல்லியல் திணைக்களமும் இதில் பாராமுகம் காட்டுகின்றது. அதற்கும் காரணம் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுகின்ற ஒரு இடம் யாழ்ப்பாணக் கோட்டையாகும். யாழ்ப்பாணக் கோட்டை என்பது காலனித்துவ ஆட்சிக்காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது ஒன்று மட்டுமே. ஆனால் அதற்கு முற்பட்ட தமிழ் வரலாறு ஒன்று அதில் உள்ளது.

2017 - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் **Durham** பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த ஒரு பேராசிரியர் தலைமையிலான குழுவினால் தெரிவிக்கப்பட்ட விடயம் என்னவெனில், யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாற்றை ஒரு நாளாக எடுத்துக் கொண்டால் குறித்த அந்த ஒரு நாளில் இறுதியாக வருகின்ற 3 நிமிடங்கள் தான். அது காலனித்துவத்திற்கு உட்பட்ட வரலாற்றைக் குறிக்கின்றது. முன்னால் இருக்கின்ற 23 மணித்தியாலங்கள் 57 நிமிடங்கள் முழுக்க முழுக்க காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட தமிழர்களின் பாரம்பரியத்தை, அவர்கள் இருப்பை பறைசாற்றுகின்றது.

ஆனால் இன்று அது மறைக்கப்பட்டு முற்றுமுழுதாக ஒரு காலனித்துவ ஆட்சியில் கட்டப்பட்ட ஒரு தொல்லியல் சின்னமாக மட்டும் அது காட்டப்படுகின்றது.

தொல்பொருள் திணைக்களமானது மந்திரிமனையை இன்னமும் அது ஒரு தொல்பொருள் சின்னமாக அறிவித்து அதனை பாதுகாக்காமைக்குரிய முக்கிய காரணம். மந்திரிமனை தமிழர்களின் பூர்வீக அதன் தன்னிகரற்ற இருப்பை பறைசாற்றுவதனால் தான்.

தொல்லியல் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களைப் பறித்தெடுத்து அதனை பௌத்தமயமாக்குதல் மற்றும் தமிழர்களின் இருப்பை பறைசாற்றுகின்ற மரவுரிமைச் சின்னங்களை அழித்தல், அழிய விடுதல் போன்ற செயற்பாடுகளை வடக்கு-கிழக்கில் முன்னெடுத்து வருகின்றது என்பது வெளிப்படை. அதன் தொடர்ச்சி தான் இந்த நல்லூர் இராஜதானியின் மந்திரி அரண்மனையும்.

100 வருடங்களுக்கு மேற்பட்ட பொருட்களை தொல்பொருள் சட்டத்தின் கீழ் அதனை உள்வாங்குகின்ற தொல்பொருள் திணைக்களம் குறித்த அரண்மனையை உள்வாங்காமல், பாதுகாக்காமல் அழிய விடுவதற்கு காரணம் அது தமிழரின் மரவுரிமைச் சின்னம் என்ற ஒரே ஒரு காரணத்தினால் தான்.

ஆக திட்டமிட்டே மந்திரிமனை அழிந்து போக வேண்டும். அழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அதனை பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரிந்த ஆவணப்படுத்தப்பட்ட நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்ற நல்லூர் மந்திரிமனையின் வரலாற்றை திரிவுபடுத்த முடியாது என்று அவர்கள் உணர்ந்ததே காரணமாகும்.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் பல தொல்லியல் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய தொல்லியல் சின்னங்களாக அறிவித்து அதன் வரலாறுகளை பௌத்தமயமாக்கிய பதிவுகள் உள்ளன. கந்தரோடை அகழ்வாராய்ச்சிகள் அப்பிரதேசம் பெருங்கற்காலத்திற்குரியது என்றும் கூறுகின்றன.

அங்கே கிடைக்கப்பெற்ற அகழாய்வுப் பொருட்களில் தமிழ் பிராமி பொறித்த பானை ஓடும் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. பலதரப்பட்ட பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள், நாகம் பொறித்த நாணயங்கள், கருங்கல் அம்மி, லட்சுமி உருவம் ஆகியவை பௌத்த காலத்துக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தவை.

சிங்கள இன எழுச்சியின் காரணமாக இங்கே தமிழ் வரலாற்றின் தரவுகளை மறுத்து அந்த கால எல்லைக்குப்பிறகு சுன்னாகத்தில் கிடைத்த காந்தரோடை மரபைச் சேர்ந்த புத்தர் உருவம் போன்ற பௌத்தத் தரவுகளை மட்டும் பிரபலமாக்கி, கந்தரோடை கதுரகொட என்ற பெயர் கொண்டு பௌத்த மரபுச் சின்னமாக இன்று பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல நெடுந்தீவில் குறுநில மன்னனான வெடியரசன் ஆட்சி புரிந்த வெடியரசன் கோட்டை தற்போது புத்தர் மூன்று முறை வந்து சென்ற இடமாக மாற்றப்படுகின்றது. அவ்வாறான வரலாற்றுச் சிதைவுகளை செய்து வரலாறுகளைத் திரித்து நல்லூர் மந்திரிமனையில் சிங்கள பௌத்த சாயத்தினை பூச முடியாது என்ற காரணத்தினால் அதனை நல்லூர் மந்திரிமனை சிதைந்து போகட்டும் என்று அது பாதுகாக்கப்படவில்லை.

ஒன்றினை அழிப்பது மட்டும் தான் வன்முறை அல்ல. அதனை பாதுகாக்காமல் அழிய விடுவதும் வன்முறைதான். மந்திரிமனை போன்ற தமிழர்களின் மரவுரிமைச் சொத்துக்களை அழிய விடுவதும் ஒரு வன்முறை தான். அந்த வன்முறையை தொல்லியல் திணைக்களம் மேற்கொள்கின்றது.

தொல்லியல் திணைக்களம் மந்திரிமனையை பாதுகாக்க வேண்டும் என்ற கடமையில் இருந்து விலகியிருக்கலாம். ஆனால் எங்களுடைய வரலாற்று மரவுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கே உள்ளது. அந்த வகையில் இவ்வாறான மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஏறிவந்த ஏணியை உதைப்பவர்கள் நாங்களல்ல - அங்கஜன்



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்று நான் சொல்வேன். ஆனால் கடந்த நான்கரை வருடங்கள் நல்லாட்சி அரசாங்கம் என்று சொன்னார்கள். நல்லாட்சி அரசாங்கம் மூலம் எல்லாம் கிடைத்துவிடும் என்றும் சொன்னார்கள்.

அது உரிமையாக இருக்கட்டும் அல்லது அபிவிருத்தியாக இருக்கட்டும் அல்லது எமது இனத்தினுடைய இருப்பாக இருக்கட்டும். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் எங்களை கைவிட்டுவிட்டது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி ஆறுகால்மடம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து, நாங்கள் எதிர்பார்த்த தீர்வு கிடைக்கும் என்று சம்பந்தன் ஐயா சொன்னார். எங்களுக்கு தீபாவளிக்கு தீர்வு வரும். பொங்கலுக்கு தீர்வு வரும்! புது வருடப் பிறப்புக்கு தீர்வு வரும் என்று பல்வேறு தீர்வுகளை எங்களுக்கு சொல்லியிருந்தார்.


நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் எதிர்பார்த்தோம் எங்கள் இனத்தினுடைய இருப்பு தக்க வைக்கப்படும் என அதுவும் நடக்கவில்லை. மக்களாகிய நீங்கள் இவ்வளவு கஷ்டத்திலும் இவ்வளவு துன்பத்திலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு வாக்குகளை அளித்துள்ளீர்கள்.

உரிமைக்காக நீண்டகாலம் போராடிய மக்கள் என்ற ரீதியில் நீங்கள் அவர்களுக்கு வாக்குகளை அளித்திருந்தீர்கள். உரிமையை எடுத்துத் தருவதாக உங்களுக்கு ஒருவர் நம்பிக்கை ஊட்டும் பொழுது அதற்காக நாங்களும் வாக்களித்தோம்.

அதாவது ஒரு மனிதன் முன்னேறி வரும் பொழுது வந்த பாதையினை மறப்பவன் மனிதனே இல்லை. ஏறிவந்த ஏணியை உதைத்து விட்டு செல்பவன் மனிதாபிமானமற்றவன். அப்படிப்பட்டவர்கள்தான் கூட்டமைப்பினர் என அங்கஜன் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வட மாகாணத்தில் ஊழல் நிறைந்து காணப்படுகிறது

## கணேஸ்வரன் வேலாயுதம் சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி)

வட மாகாணத்தில் ஊழல் நிறைந்து காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2018 டிசெம்பர் இரணைமடு நீர்த்தேக்கத்தில் பாரிய வெள்ளப்பெருக்கு ஒன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக அப்போதைய ஆளுநர் சுரேன் ராகவனால் விசாரணை மேற்கொண்டு 300 பக்கங்கள் கொண்ட அறிக்கை பெறப்பட்டது.

இருப்பினும் குறித்த அறிக்கையை அவர் வெளியிடவில்லை. நாம் பலதடவை கேட்டுக்கொண்ட போதிலும் அறிக்கையை பெற முடியவில்லை. பின்னர் ஆளுநர் தனக்கு கீழே வேலை செய்யும் உத்தியோகத்தர்களை வைத்து 17பக்கங்கள் கொண்ட அறிக்கையை தயாரித்து இரணைமடு விடயத்தில் ஊழல் எதுவும் நடைபெறவில்லை என அறிக்கை வெளியிட்டார்.

நான் பாராளுமன்றம் சென்றதும் முதலாவதாக இரணைமடு ஊழல் விடயத்தை வெளிக்கொண்டு வருவேன். ஊழல் அறிக்கை வெளிவர வேண்டும். சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் தண்டிக்கப்பட வேண்டும். இரணைமடு விவகாரத்தில் பெரிய மட்டங்களில் ஊழல்இடம்பெற்றுள்ளது. ஆனால் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் இது தொடர்பாக எந்தவொரு அரசியல்வாதியும் தட்டிக்கேட்கவில்லை என அவர் தெரிவித்தார். (ஜ-4-30)

# இராசிபலன்

04.07.2020
ஆனி 20, சனிக்கிழமை
சதுர்த்தசி நண்பகல் 11.59 மணிவரை
மூலம் பின்னிரவு 12.19 மணிவரை
சுபநேரம் 2.57-4.27 மணிவரை
இராகுகாலம் 8.57-10.27 மணிவரை
சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம்
பூரணை விரதம் வளவன்


மேஷம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


ரிஷபம்

சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், உடல்நலம் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


கடகம்

பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுவாரஸ்யமான நாள்.


சிம்மம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.


கன்னி

மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடப்பர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.


துலாம்

உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாக மான தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வருமானம் வந்து சேரலாம்.


விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.


தனுசு

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, போசன சுகமுண்டு.


மகரம்

திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.


கும்பம்

எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



மீனம்

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

வேலைக்குள் மூழ்கி உன் சிந்தனைக்குச் சமாதி கட்டி விடாதே

# இராஜதந்திர மிதிவெடிகளிலிருந்து நாட்டைக்காப்பாற்ற நடவடிக்கை எடுப்பேன்

## விமல் திட்டவட்டம்



(கொழும்பு)

**நாட்டை இராஜதந்திர மிதிவெடிகளில் இருந்து காப்பாற்றுவதற்கு ஏற்றவகையில் செயற்பாடுகளை முன்னெடுப்பேன் என அமைச்சர் விமல் வீரவன்ச திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**

நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுத் தேர்தல் தொடர்பான அரசியல் கொள்கைகளை மல்வத்த அஸ்கிரிய மகாநாயக்கர்களுக்கு வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கடந்த அரசாங்கத்தின் காலத்தில், அதாவது இப்போது எதிர் பார்த்துகொண்டு இருக்கின்ற மிலேனியம் சவால் உடன்படிக்கையை போன்ற இராஜதந்திர மிதிவெடிகளில் இருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் எங்களது ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் சூட்சுமமான முறையில் செயற்படுவேன்

இதேவேளை முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஒன்றுதான், துறைமுகத்தின் கிழக்கு பகுதியை இந்தியாவுக்கு வழங்குகின்றமையாகும்.

எனவே ஏனைய நாடுகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை மிகவும் கவனமாக கையாண்டுதான் அதிலிருந்து விடுபட வேண்டும்.

மேலும் முன்னைய அரசாங்கத்தின் ஒப்பந்தங்களை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அத்துடன் எங்களுக்கு நாடாளுமன்றத்தின் அதிகாரம் கிடைக்கப்பெற்றவுடன், நாட்டிற்கு சிக்கலை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஏனைய நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடுவோம்" என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# கொழும்பில் கொரோனா நோயாளி சமூகத் தொற்றிற்கு வாய்ப்பில்லை

## அனில் ஜாசிங்க கூறுகிறார்



(கொழும்பு)

கொழும்பு-13 ஜிந்துபிட்டியில் கொரோனா தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டதால் யாரும் அச்சமடைய வேண்டியதில்லையென சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வீடு திரும்பி, தனிமைப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அவருடன் தொடர்பில் இருந்த அந்த பகுதியை சேர்ந்த 154 பேர் தனிமைப்படுத்தல் மையங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த நோயாளியிடமிருந்து சமூகத் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை, சமூகத் தொற்றினால் அவர் பாதிக்கப்பட்டிருக்கவில்லையென சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். (ஜ-8)



**பிரித்தானிய தூதரகத்தின் பிரதித் தூதுவர் நெஜில் கவனாக் மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான இரண்டாவது செயலாளர் சிவோன் லைதம் ஆகியோர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் துணைத் தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் ஆகியோருடன் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு மாகாணத்தில் இருக்கக் கூடிய பாதுகாப்பு நிலவரங்கள், கைதுகள், இராணுவப் பிரசன்னங்கள் போன்றவை தொடர்பாகவும் தேர்தல் கள நிலவரங்கள் தொடர்பாகவும் தமிழ் மக்களினுடைய அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.**

# வண்ணை வீரமாகாளி அம்மனுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம்-வண்ணார் பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும்.



**யாழ்ப்பாண வைபவ மாலையில் வரும் கூற்று**

நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும், சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்திகளினால் ஸ்தாபிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் நல்லூரின் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் (வண்ணார்பண்ணை) நல்லூருக்கு நுழைய முயன்ற அந்நியருடன் நடைபெற்ற போர்கள் பல இப்பகுதியில் நிகழ்ந்தாகத் தெரிகிறது. இதுபற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் வரும் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது.

**யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வம் வீரமாகாளி**

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாக வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்காலத்திலிருந்தே இவ்வாலயம் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக் கலன்களை கொலுவில் வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளை குவித்து வந்தார்கள்.

**இலங்கையில் முதல் முதலில் மஹிசாசுர சங்காரம் நடைபெற்ற திருக்கோவில்**

இலங்கையில் முதன் முதலில் மஹிசாசுர சங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் யாழ். நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

கோயிலின் உள்ளே புகுந்ததும் கண்ணைக் கவர்வது அங்குள்ள கொடித்தம்பமாகும். ஆலய உட்பிரகாரத்தில் கிழக்கு வீதியில்யாக சாலையும், வாகன சாலையும், தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளிய மூர்த்திகளான விநாயகர், நாகதம்பிரான், மகாவல்லி, கஜவல்லி சமேத சுப்பிரமணியரும் மேற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு சனீஸ்வரர் ஆலயமும், புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபம், பிரதான வடக்கு நோக்கிய வாசலில் சப்த தளங்களைக் கொண்ட வானளவாக உயர்ந்த இராஜகோபுரம், மணிமண்டபம், கம்பீரமாகக் காட்சியளிக்கும் தேர்முட்டி, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகுறு தீர்த்தத் தடாகம், வைரவப் பெருமான் ஆலயம், அன்னபூரணி மடாலயம், தொண்டர் சபை போன்ற சிறப்பு அமைப்புக்களைக் காணலாம்.

வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் காணப்படும் வாகனங்கள் மகத்துவமான சிறப்புக்களைக் கொண்டு விளங்குவன. அந்த வகையில் அழகிய திருமஞ்சம், புஸ்பரதம், சப்பறம், கண்ணைக் கவரும் பல வாகனங்கள் எல்லாம் அம்பிகையான ஆலயத்திற்கு சிறப்புக்களைப் பெருக்கி நிற்கின்றன.

ஆனிப் பௌர்ணமியை தீர்தோற்சவமாகக் கொண்டு இருபத்தைந்து தினங்களும் உற்சவங்கள் காலை, மாலை விழாக்களாக நடைபெறும் மஹோற்சவ காலங்களில் ஒவ்வொரு நாள் உற்சவமும் விசேடமானது. இவ்வாறாக வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் வண்ணை வீரமாகாளியம்பாளின் தேர்த்திருவிழா இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

**பகையறுத்து வாழ்வுதர வீரவாளேந்தி தேரேறுகிறாள் வீரமாகாளி**

அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக பகையறுத்து வாழ்வுதர வீர வாளேந்தி தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் காண யாழ்ப்பாணக் குடா நாடே வண்ணை வீரமாகாளி அம்பாளின் ஆலயத்தில் சங்கமமாகும் காட்சியைப் பார்க்கலாம். வீரமாகாளியை சரண் புகுந்து நாமெல்லாம் வீரசக்தி பெறுவோம் வாரீர்.

செந்நாப்புலவர்.
மதுரகவி காரை.எம்.பி.
அருளானந்தன்

## விடுதலைப் புலிகள் தொடர்பில் சர்ச்சைக் கருத்து; விஜயகலாவின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டமை தொடர்பாக முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்றுவரும் குறித்த வழுங்கு விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் 27 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் புதுக்கடை நீதிமன்றத்தில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் நீதிமன்றத்தில் சட்டத்தரணி தவராஜாவுடன் ஆஜராகியிருந்தார். மேற்படி வழக்கை விசாரணை செய்த கொழும்பு புதுக்கடை நீதவான் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்தார். (ஜ-5-3)

## சட்டத்தை மீறிய 318 பேருக்கு எதிராக பாவனை அதிகார சபையினால் வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்தை மீறிய 318 வழக்குகள் அதிகார சபையினால் பதியப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரியும்வடமாகாணபதில் உதவிப்பணிப்பாளருமாகிய அப்துல் லத்தீப் ஜஃபர் ஸாதிக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ் வழக்குகள் காலாவதி, விலைப்பட்டியலின்மை, உத்தரவாதம் இன்மை, இறக்குமதி விபரமின்மை, SLS தரச்சான்றிதழ் இன்மை, கட்டுப்பாட்டு விலையினை மீறியமை, பொறிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்தமை தொடர்பான காரணங்களுக்காக பதியப்பட்டன என்று தெரிவித்தார்.

நிறைவடைந்த அரையாண்டு காலப் பகுதியில் யாழ். மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதவான் நீதிமன்றங்களில் ஜனவரி மாதம் 115 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 102 வழக்குகளுக்கு தண்டப்பணமாக 4 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாவும் பெப்ரவரி மாதம் 69 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 78 வழக்குகளுக்கு தண்டப்பணமாக 3 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாவும் மார்ச் மாதம் 42 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 43 வழக்குகளுக்கு தண்டப் பணமாக ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபாவும் ஏப்ரல், மேமாதங்களில் Covid-19 காரணமாக வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. ஜூன் மாதம் 92 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 84 வழக்குகளுக்கு தண்டப்பணமாக 4 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாவும் அபராதமாகக் கிடைக்கப் பெற்றது. மொத்தமாக அரையாண்டு காலப்பகுதியில் 318 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 307 வழக்குகள் நிறைவு பெற்று அபராதப் பணமாக 14 இலட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் கிடைக்கப்பெற்றது எனவும் தெரிவித்தார். (4-5)



## நெல்லியடி வீரர்களுடன் காற்பந்தாடிய சஜித்



(யாழ்ப்பாணம்)

சஜித் பிரேமதாஸ நெல்லியடி இராஜ கிராமத்தில் உள்ள கரவை சுடர் உதைபந்தாட்ட வீரர்களுடன் இணைந்து காற்பந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

வடக்கிற்கு நேற்று முன்தினம் பிரசார நோக்கில் விஜயம் மேற்கொண்ட சஜித் பிரேமதாஸவே இவ்வாறு காற்பந்தாட்டத்தில் கலந்து கொண்டார்.

இதேவேளை மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவினால் கட்டிக் கொடுக்கப்பட்ட 85 வீட்டுத் திட்டங்களின் நினைவுக் கல்லினையும் நேற்று தந்தையின் நினைவாக திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இராஜகிராம மக்களைச் சந்தித்து மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்., வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். (4-5)

## நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.அ.தங்கதுரையின் 23 ஆவது நினைவு தினம் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வலி.வடக்கு முன்னாள் பிரதேச சபை தவிசாளர் அமரர்.ஸ்ரீபாஸ்கரனின் இல்லத்தில் (மல்லாகம்) நடைபெறும். (4-5)

## யோகா பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக உலகம் அமைப்பின் புதிய யோகா பயிற்சி நெறிகள் அறிமுக நிகழ்வு நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர்த் தேரடி அருகேயுள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் யோக உலகம் அமைப்பின் இயக்குநர் உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இதில் யோகம் பற்றிய விசேட உரையை யாழ்.பல் கலைக்கழக இந்துக் கற்கை கள் பீடத்தின் விரிவுரையாளர் சி.ரமணராஜா வழங்குவார். (4-5)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

பண்டிதர் துரைராசசிங்கம் சடாட்சரசிங்கம்,மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சைவப் புலவர், பௌராணிகர் ஆகிய பட்டங் களைப் பெற்ற வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவராவார். (4-5)

# மாணவர்கள் 6 மணித்தியாலங்கள் முகக்கவசம் அணிவதால் ஆபத்து

## அனில் ஜாசிங்க எச்சரிக்கை



(கொழும்பு)

**பாடசாலை மாணவர்கள் தினமும் 6 மணித்தியாலங்கள் முகக் கவசம் அணிந்தால் வேறு நோய்த் தொற்று ஏற்படும் என சுகாதாரப் பணிப்பாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்வரும் 6 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமானதா? என அனில் ஜாசிங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்ட சுகாதார விதிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையில் அதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்குச் செல்லும் போதும் வெளியேறும்போதும் முகக்கவசம் அணிவதில் சிக்கல் இல்லை என சுட்டிக்காட்டியுள்ள அவர், பாடசாலை மாணவர்கள் 6 மணித்தியாலங்கள் பாடசாலை நேரத்திற்குள் தினசரி முகக் கவசம் அணிந்தால் வேறு நோய்த் தொற்று ஏற்படக்கூடும்.

இந்நிலையில், பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வந்த பின்னர் தங்கள் முகக் கவசத்தை நீக்கி பாதுகாப்பாக வைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஜ-2)


# நாடாளுமன்ற தேர்தல்-2020

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

"மக்களின் ஆணையே எமக்குத் தேவை மாற்றத்தைப் பெற்றுத்தருவது எமது பொறுப்பு"



**டக்ளஸ் தேவானந்தா**

இலக்கம் 05

(செயலாளர் நாயகம் - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



**ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்**

இலக்கம் 01

**(ரங்கன் தோழர்)**

(பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்/ கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர்)



**முடியப்பு றெமீடியஸ்**

இலக்கம் 07

(பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணி/ யாழ்.மாநகர சபை உறுப்பினர்)

வாக்களிப்பீர்...

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

(C-014)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



(3189)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கொழும்பில் சொந்தமாக கடை வைத்திருக்கின்றார்
எதிர்பார்ப்பு: பொருத்தமான வரன்
தொ.இ: B/10899

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: செவ் 5 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில் க.பொ.த.சா/த.டுபாயில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10900

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 36 3/4 செவ் 11 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: HNDA, கணக்காளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10901

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 15 செவ் 3 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. லண்டனில் வியாபாரம் செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10902

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 16 1/4 செவ் 1 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கணக்காளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்
தொ.இ: G/8347

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 28 செவ் 3 இல் உயரம்: 154cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. லிகிதர் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் (தனியார்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ: G/8349

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: சூரி. செவ் 12 இல் உயரம்: 166cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8351

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MEng, (Hons) information system Eng - UK Seniorvice president & Morgan UK
எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor
தொ.இ: G/8357

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# ஆய்வு நூல் வெளியீடு

**நூல் விபரம் :- இலங்கைத் தமிழர் ஒரு முழுமையான வரலாறு ( கி.மு 300 - கி.பி 2000 )**

நூலாசிரியர் :- **பேராசிரியர் முருகர் குணசிங்கம்**
இடம் :- " தங்கம்மா முதியோர் இல்ல வளாகம் " புதுக்குளம், கனகராயன் குளம், வவுனியா வடக்கு.
திகதி :- 05.07.2020 நாளை ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை (மாலை)
பிரதம விருந்தினர் :- **Dr. T. சத்தியமூர்த்தி** பணிப்பாளர் - யாழ். வைத்தியசாலை
நூல் அறிமுக உரை : - **Dr. K.T. கணேசலிங்கம்** துறைத்தலைவர், அரசியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

**மேலும் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ள உள்ளனர்.**
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர் முருகர் குணசிங்கம்

( C-9772)

# மகிந்தவை பிரதமராக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட சதி

## வஜிர குற்றச்சாட்டு



(கொழும்பு)

**சஜித் பிரேமதாஸவின் தலைமையில் இயங்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு குழுவினர், மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் ராஜபக்ஷர்களது அரசியலைத்தான் தற்போது பின்பற்றுகின்றார்கள் எனவும் வஜிர அபேவர்தன குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளையே தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றதென அவர் தெரிவித்தார். (ஜ-2)

# அரசாங்கம் தன்னைத்தானே அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறது

## மனோ சாடல்



(கொழும்பு)

இந்த அரசாங்கம் தன்னைத்தானே அவமானப்படுத்திக் கொள்ளும் அரசாங்கமாக மாறிவிட்டது என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஒரு குழப்பகரமான அரசாங்கமாக மாறியுள்ளதாகவும் அவர் இதன்போது விசனம் வெளியிட்டார்.

அத்துடன், நாட்டிற்கு பெருமையைக் கொண்டுவந்த கிரிக்கெட் வீரர்களை அவமானப்படுத்தி தற்போதைய அரசாங்கம் குழப்பத்தினை ஏற்படுத்துவதாகவும் முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் மஹேல ஜெயவர்த்தனவிற்கும், குமார் சங்கக்காரவிற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள அவமானத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் நாட்டின் கீர்த்தியினை அபகீர்த்தியாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட போது சங்காவும் மஹேலவுமே நாட்டிற்கு கீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் மறந்து விடக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திற்கு புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்ல நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவிடம் பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்ட சஜீவ மெதவத்த பொலிஸ் நலன்புரிப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பணியகத்தின் புதிய பணிப்பாளராக சுஜித் வெதமுல்ல நியமிக்கப்பட்டுள்ளார். (ஜ-2)

# மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள சேவைகள் முதலாம் திகதியிலிருந்து வழமைக்குத் திரும்பின

(கொழும்பு)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்- 19 வைரஸால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமைகள் காரணமாக வரையறைகளுக் குட்பட்ட நிலையில் செயற்பட்டு வந்த திணைக்களச் செயற்பாடுகளை நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு கடந்த புதன் கிழமையில் இருந்து வழமை போன்று ஆரம்பித் துள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் தொலைபேசி ஊடாக நேரகாலத்துடன் திகதிகளை ஒதுக்கிக் கொள்ள வேண்டிய தேவை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, அலுவலக வளாகத்திற்குள் வருகின்ற சேவை பெறுநர்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய முகக் கவசங்களை அணிதல், கிருமித்தொற்று நீக்கம் மற்றும் சமூக இடைவெளிகளைப் பேணுதல் உட்பட அனைத்து சுகாதார ஆலோசனைகளையும் பின்பற்றுதல் வேண்டும் என்றும் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஜ-2)

# இலங்கையர்களுக்கு மீண்டும் விசா வழங்கும் பிரித்தானியா

(கொழும்பு)

இலங்கையர்கள் மீண்டும் பிரித்தானியா செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நாளை மறுதினம் 6 ஆம் திகதி முதல் பிரித்தானியாவினால் இலங்கை விசா விண்ணப்பங்கள் தொடர்பான செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீ.எப்.எஸ் கிலோபல் நிறுவனம் அறிக்கை ஒன்று நேற்று வெளியிட்டது.

அதற்கமைய நேற்று முதல் இணையத்தளம் ஊடாக இலங்கையர்கள், பிரித்தானியா விசா விண்ணப்பங்களை கொழும்பில் உள்ள விண்ணப்ப அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

இதற்கு மேலதிகமாக நாளை மறுதினம் 6 ஆம் திகதியில் இந்தியாவில் தெரிவு செய்யப்பட்ட 11 நகரங்களில் விசா விண்ணப்ப நிலைய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது. விசா விண்ணப்பம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொண்டதன் பின்னர் விண்ணப்பதாரிகளின் வெளிநாட்டு கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்காக தங்கள் அலுவலகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அழைக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்ட சந்திப்பு நேரத்திற்கு பதிலாக புதிய நேரம் ஒதுக்கிக் கொள்ள முடியும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. கொரோ்னா வைரஸ் பரவல் காரணமாக கடந்த சில மாதங்களாக உலக நாடுகளுக்கான பயணங்கள் முற்றாக முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் 5000 தேர்தல் கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் கண்காணிப்புக் கடமையில் ஐயாயிரம் பேரை ஈடுபடுத்தவுள்ளதாக பவ்ரல் (PAFFREL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவர்களில் நீண்டகால கண்காணிப்பாளர்களும் உள்ளடங்குவதோடு தபால்மூல வாக்களிப்புக்கும் குழுவொன்று ஈடுபடுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட 40 அரசியல் கட்சிகள் மற்றும் 313 சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 7,452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நாடு முழுவதிலுமுள்ள மாவட்டங்களிலிருந்தும் 196 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதோடு தேசியப் பட்டியல் மூலம் 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தபால்மூல வாக்களிப்புக்கான கண்காணிப்புக்காக அரசியல் ரீதியில் அதிக ஆர்வமுள்ள பிரதேசங்கள் மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமுள்ள பிரதேசங்களைக் கருத்திற்கொண்டு 856 வாக்கெடுப்பு நிலையங்களைத் தெரிவு செய்துள்ளதோடு குறித்த வாக்களிப்பு நிலையங்களில் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



தேர்தல் தினத்தன்று இடத்தில் நிலைநிறுத்தப்பட்டு கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்காக மூவாயிரம் பேரை ஈடுபடுத்துவதற்காக பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்கெண்ணும் நிலையங்களிலும் கண்காணிப்பாளர்களை நிறுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள தோடு மொத்தமாக ஐயாயிரம் கண்காணிப்பாளர்களைத் தேர்தல் கண்காணிப்பு கடமைகளில் ஈடுப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஜ-4)

# செங்கல் மற்றும் ஓடு உற்பத்தி செயற்பாடுகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒட்டுச்சுட்டான் பகுதியில் உள்ள செங்கல் மற்றும் ஓடு உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தினால் குறித்த நிலையங்கள் மறுசீரமைக்கப்பட்டு எந்தவொரு தனியார் நிறுவனங்களின் பங்களிப்பும் இல்லாமல் இதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ- 8)

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பாராளுமன்றக் குழுவிலிருந்து மாவட்ட அமைச்சர் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் அமைச்சரவை சாராத அமைச்சர்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அபிவிருத்தி தொடர்பான சகல அதிகாரங்களும் அமைச்சரவை சார்ந்த அமைச்சர்களிடமே காணப்பட்டது. இதனால் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கு மாவட்ட அமைச்சர் அமைச்சரவை சார்ந்த அமைச்சர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையே இருந்தது.

அதாவது எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளையும் மாவட்ட அமைச்சர் தான் திட்டமிடும் விடயங்களைக்கூட மேற்கொள்ள முடியாது இருந்தன. மொத்தத்தில் மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள் கைகளிலேயே ஒட்டுமொத்த அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தன. அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்குப் பதிலாக, அதிகாரங்கள் அனைத்தையும் பிடுங்கி மையப்படுத்தி தன்னகத்தே குவித்து வைத்துக் கொண்டது. அதை இனப்பிரச்சினைக்கு தீர்வு என்றது.

### கிராமோதய சபைகள்

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் முறையில் மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே பெரிய இடைவெளி காணப்பட்டதால், மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு மக்களின் ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் பிரிவு 17 இல் திருத்தம் செய்யப்பட்டு கிராமோதய சபைகள் **(Gramodaya Mandala)** நிறுவப்பட்டன.

ஆனால் மக்களின் ஈடுபாடு அவர்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றும் உத்தியோகபூர்வ ஒப்பந்தகாரர்களாக மாறியது மட்டுமே. வேறு பலனேதும் கிடைக்கவில்லை. "கிராமோதய சபைகள் முறை" ஜனநாயகத் தன்மை கொண்டதும், செயற்றிறன் குறைந்த முறையாகவும் காணப்பட்டதுடன், பட்டின சபைகள், கிராம சபைகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பக்கூடியதான வகையில் அமைந்திருக்கவுமில்லை. மேலும் இவை அரசியல் நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டதால் பல காரணங்களால் நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாமல் போனது.

### மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் தமிழர் பிரச்சினையும்

1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் மூலம், இலங்கை முழுவதுக்கும் மாவட்ட சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையில் நிலவிய இனப்பிரச்சினைக்கு, அரசியல் தீர்வொன்றைக் கோரி நின்ற தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கும் பொருட்டே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசியல் தீர்வு வேண்டியவர்கள் தமிழ் மக்கள். குறிப்பாக வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள். ஆனால், அவர்களுக்கு மட்டுமான தீர்வொன்றை வழங்கினால் அது தன்னுடைய வாக்கு வங்கியைப் பாதிக்கும் என ஜே.ஆர். ஜெயவர்த்தன எண்ணியிருக்கலாம். அதனால்தான், நாடுமுழுவதற்கும் பொதுவான தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை முன்வைத்தார் என்று சொல்லப்படுகிறது.

> **அரசியல் தீர்வு வேண்டியவர்கள் தமிழ் மக்கள். குறிப்பாக வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள். ஆனால், அவர்களுக்கு மட்டுமான தீர்வொன்றை வழங்கினால் அது தன்னுடைய வாக்கு வங்கியைப் பாதிக்கும் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன எண்ணியிருக்கலாம். அதனால்தான் நாடு முழுவதற்கும் பொதுவான தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை முன்வைத்தார் என்று சொல்லப்படுகிறது.**

இந்த நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் மிகுந்த பொறுப்புணர்வோடு இதனைக் கையாண்டிருந்தன என்று குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், இத்தகைய குறைந்தபட்சத் தீர்வை இலகுவில் புறக்கணித்துவிட்டு பிரிவினை கோரிச் சென்றிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அன்றைய காலத்தில் தமிழ் மக்களை அரசாங்கம் இன்னும் அடக்கியொடுக்க ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியிலான தீர்வை மறுக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, இதனை அரசாங்கம் இலகுவில் கடந்துபோக ஒரு வாய்ப்பாக அது அமைந்திருக்கும். ஆகவேதான், ஜனநாயக ரீதியிலான தீர்வொன்றின் மீது தமிழ் மக்களுக்கிருக்கும் நம்பிக்கையைப் பறைசாற்றும் வகையில் தமிழ்த் தலைமைகள் இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் எனும் தீர்வையும் ஏற்றுக் கொண்டன.

சமாதான பேச்சுவார்த்தைகள், இணக்க அணுகுமுறைகள் என்பன தோற்றுப் போயிருந்த நிலையில் தனிநாட்டுத் தீர்மானத்தைத்தவிர வேறு வழியில்லை என்ற நிலைமைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருந்தார்கள். இதனால் 1973 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு, அதற்காகப் போராடுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்கை அடைவதற்கான வழித்தடங்கள் பற்றியோ அல்லது அதற்கான வியூகம் குறித்தோ தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் தீர்மானங்களைக் கொண்டிருக்கவில்லை.

அன்றைய ஜனாதிபதிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக மாவட்ட சபைகளை உருவாக்குவது என்றும் இனப்பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு காணும் வழிமுறையைக் கையாள்வது என்றும் உடன்பாடு எட்டப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி இணங்கி முன்வந்திருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1977 ஆம் ஆண்டு தேர்தலில் அமோக வெற்றியீட்டியிருந்தது. இந்த வெற்றியை பேரின அரசியல்வாதிகளினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் தயாராக இருக்கவில்லை.

மறுபக்கத்தில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முரணான வகையில் மாவட்ட சபை ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டு அதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவை தமிழ் இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முக்கிய அரசியல் தலைவர்களும் கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

> **தனிநாட்டுக் கோரிக்கைக்கு முரணான வகையில் மாவட்ட சபை ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டு அதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவை தமிழ் இளைஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.**

கல்வியில் தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் தரப்படுத்தல் முறையை நடைமுறைப்படுத்தியிருந்த அரசாங்கத்தின் மீது அளவற்ற வெறுப்பையும் கசப்புணர்வையும் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் தனிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, அந்த இலக்கை அடைவதற்காக ஆயுதப் போராட்ட வழிமுறையை மிகவும் இரகசியமாக மேற்கொண்டிருந்தனர். இதனால் ஆங்காங்கே அரச ஆதரவாளர்களான தமிழ்ப் பிரமுகர்களுக்கு எதிராகவும் பொலிஸார் மற்றும் ஆயுதப்படையினருக்கு எதிராகவும் அவ்வப்போது தாக்குதல்கள் இடம் பெற்று வந்தன.

தமிழ் விடுதலைக் கூட்டணியின் இந்த முடிவினால் தமிழ் விடுதலைக் கூட்டணியும் அதன் தலைவராக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் கடும் எதிர்ப்பையும் அழுத்தத்தையும் சந்திக்க வேண்டியேற்பட்டது. தமிழ் இளைஞர்களின் இந்த எதிர்ப்பு 1980 ஏப்ரல் மாதத்தில் வலுவடையத் தொடங்கியிருந்தது.

தமிழ் இளைஞர் முன்னணி, 1980 ஏப்ரலில் தமிழ் ஐக்கிய விடுதலைக் கூட்டணி 1980 மே மாதத்துக்குள் ஒரு விடுதலை இயக்கமாக மாற வேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தது. இது நடக்காவிட்டால் தமிழ் இளைஞர் முன்னணி, தமிழ் ஐக்கிய விடுதலைக் கூட்டணியுடனான தொடர்புகளைத் துண்டிக்கும் என்று அறிவித்தது.

1981 மார்ச் 19 இல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 1981 ஜூன் நான்காம் திகதி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதாவின் விவாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிநடப்புச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

> **மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதும் தாம் அதைப் புறக்கணிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது.**

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதும் தாம் அதைப் புறக்கணிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது. 1980 ஒக்டோபர் 16 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம் என்பவற்றின் மூலம் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்ட நபரொருவர் தேர்தல்களில் எவ்வகையிலும் பங்கெடுப்பது தடுக்கப்பட்டது.

இந்தச் சூழலில் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் களமிறங்க ஒரு பலமான வேட்பாளர் தேவைப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி அ.தியாகராஜாவை தமது வேட்பாளராகத் தெரிவு செய்தது.


(தொடரும்...)

# அரச புலனாய்வுப் அதிகாரியின் அசமந்தப் போக்கே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணம்

## முன்னாள் சிரேஷ்ட புலனாய்வு பிரிவு அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களுக்கு முன்னர் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன பின்பற்றிய கடுமையான பொறுப்பற்ற நடவடிக்கையே தாக்குதல் முறியடிக்கப்படாமைக்கான காரணம் என முன்னாள் சிரேஷ்ட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தனர்.**



பெறப்பட்ட புலனாய்வு தகவல்களுக்கு அமைய நிலந்த ஜயவர்தன உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை அது தொடர்பில் இராணுவ புலனாய்வுத் பிரிவினருக்கு அறிவித்திருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம் என்பதும் ஆணைக்குழுவில் தெரியவந்தது.

கடந்த வாரம் இரண்டு நாட்கள் சாட்சியம் வழங்கிய முன்னாள் இராணுவ புலனாய்வு பணிப்பாளர், கடந்த புதன்கிழமை மேலதிக விசாரணைகளுக்காக ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது மேலதிக சொலிசிட்டர் நாயகம் சமர்ப்பித்த உளவுத்துறை ஆவணம் குறித்து விளக்கிய அவர், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ. எம்.ஹஸ்புல்லா மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் அமீர் அலி ஆகியோர் தீவிர முஸ்லிம் அமைப்பான "சுன்னத் வல் ஜமாத்" அமைப்புடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தாகக் கூறினார்.

தாக்குதல் நடந்த காலப்பகுதியில் இராணுவ புலனாய்வு பிரிவின் பணிப்பாளராக இருந்த எனக்கு தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்தினம், நிலந்த ஜயவர்தன அழைப்பெடுத்து பாராளுமன்றத் தெரிவு குழுவிடம் தெரிவித்திருந்தாலும் அவ்வாறு என்னைத் தொலைபேசியில் அழைக்கவில்லை எனக் கூறினார்.

எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐந்து தற்கொலை குண்டுதாரிகள் கொல்லப்பட்டனர் என்பதை ஏற்கனவே தீவிர புலனாய்வில் ஈடுபட்ட இராணுவ புலனாய்வு பிரிவு அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருந்ததாகவும் மேலும் தாக்குதலுக்கு முன்னர் அவர்களின் பெயர்களும் இடங்களும் தெளிவாக இருந்ததாகவும் அவர் ஆணைக்குழுவில் வெளிப்படுத்தினார்.

அவ்வாறான நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த தகவல்களை இராணுவ புலனாய்வுத் துறைக்கு தெரிவிக்க அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால் பயங்கரவாதிகளை துரத்தி பிடித்து கைது செய்து தாக்குதலை தடுத்திருக்கலாம் என அவர் கூறினார்.

இவற்றைச் செவிமடுத்த ஆணைக்குழு உயிர்த்த ஞாயிற்று தாக்குதலுக்குப் பின்னர் அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரால் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரை விடுவிக்க இராணுவத் தளபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டாரா? என வினவியது.

அதற்கு பதிலளித்த சாட்சியாளர், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் அப்போதைய இராணுவ தளபதி மகேஸ் சேனநாயக்கவை அழைத்து சந்தேக நபர் குறித்து விசாரித்ததாக தெரிவித்தார்.

அதன் பின்னர், இராணுவ தளபதி தம்மை அழைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டாரா? என கேட்டதாகவும் தான் ஆம் என்று பதிலளித்த பின்னர் தொடர்ந்தும் அவரிடம் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியதாக சாட்சி கூறினார்.

தொடர்ந்தும் சாட்சியமளித்த அவர், தெஹிவளை பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இன்னும் பயங்கரவாத விசாரணை பிரிவின் காவலில் இருப்பதாக மேலும் தெரிவித்தார். (ஜ-4)

---

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பெரமுன கைப்பற்றுவதற்கான தேவையில்லை

### சாகர காரியவசம் கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றுவதற்கான தேவையில்லை என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரான சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிகரமான ஆரம்பத்தை பெற்றுக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கட்சியை மேலும் வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கீழ் மட்டத்தில் வெற்றிகரமான கட்டமைப்பை கொண்டுள்ள பிரதான அரசியல் கட்சி எனவும் சாகர காரியவசம் மேலும் குறிப்பிட்டார். (ஜ-4)

---

## முதலைக்கு இரையான பொலிஸ் அதிகாரி

(மாத்தறை)

மாத்தறையில் நில்வள கங்கையில் முதலை காவிச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நில்வள கங்கையில் விழுந்த பொலிஸ் அதிகாரி ஒருவரை முதலையொன்று காவிச்சென்ற சம்பவம் நேற்று முன்தினம் பதிவாகியது.

குறித்த பொலிஸ் அதிகாரியின் கையடக்க தொலைபேசி கங்கையில் விழுந்ததை தொடர்ந்து அதை அவர் எடுப்பதற்காக முயற்சித்துள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் திடீரென தவறி கங்கைக்குள் விழுந்த பொலிஸ் அதிகாரியை முதலையொன்று இழுத்துச் சென்றதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த அதிகாரியின் சடலத்தை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஜ-4)

---

## இறைவரித் திணைக்களம் திங்கள் முதல் வழமைக்கு

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல், வழமை போன்று செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொதுமக்களுக்கான தங்களது சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நந்துன் குருகே தெரிவித்துள்ளார். (ஜ-4)

---




## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

### அறிவித்தல்

எமது சங்கத்தில் ஓட்டோ சேவைக்கு பதிவு செய்து தரிப்பிட சேவைக்கென அனுமதி பெற்று வாடகைச் சேவையிலீடுபடும் அனைத்து தரிப்பிட ஓட்டோ உரிமையாளர்க்கு

அன்புடையீர்!

எமது சங்கத்தில் பதிவு செய்து அங்கத்துவம் பெற்று சேவையிலீடுபட்ட தாங்கள் தற்போதும் தங்களுக்குரிய தரிப்பிடங்களில் ஓட்டோ சேவையில் ஈடுபடுகின்றீர்களா என்பதை எதிர்வரும் 30.07.2020 ஆம் திகதிக்குள் சங்கத்துடன் நேரில் தொடர்பு கொண்டு பதிவினை உறுதி செய்யுமாறும்

எதிர்வரும் 10.08.2020 இற்குள் தங்களின் அங்கத்துவ சந்தா நிலுவைகளை பகுதியாகவோ அன்றி முழுமையாகவோ செலுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளுமாறும் இதில் கவனமெடுத்து செயற்பட்டு அங்கத்துவத்தை உறுதி செய்யவும். இக்காலப் பகுதிக்குள் தொடர்பு கொண்டு நிலுவை செலுத்தாதவர்களின் பதிவு மீள்பரிசீலனை செய்து இரத்துச் செய்யப்படும் என அறியத்தருகின்றோம்.

(C-9827)

40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்



## மணமக்கள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் மணமகள்மாருக்கு (1983, 1986, 1990, 1996) யாழில் உள்ள பட்டதாரி மணமகன்மார், வெளிநாட்டில் வசிக்கும் மணமகள்மாருக்கு (1977, 1987) மணமகன்மார் மற்றும் மணமகனுக்கு மணமகள், உள்ளூர் மணமக்கள் தேவை. (3787)

0764752219, 0762049298, 0770237639

# முல்லை.எல்லைக் கிராமங்களில் வாழும் தமிழர் தமது காணிகளை மீட்கப் போராடுகிறார்கள்

## ரவிகரன் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் புறக்கிராமங்களான, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற எமது தமிழ் மக்கள், தமது காணிகளை மீட்டெடுப்பதற்காகவும், காணிகளைத் தக்க வைப்பதற்காகவும் எல்லையில் நின்று போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1970ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்ட பின்னர், இங்குள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வாழும் தமிழ் மக்கள் தமது காணிகளைத் தக்க வைப்பதில் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், இக் காணி விடயங்களில் காணப்படுகின்ற நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாது என்ற நிலையில், தமது பகுதிகளில் இருந்து வெளியேறியிருந்தால் தற்போது நாயாறுதான் தமிழ் மக்களின் எல்லைக்கிராமமாக இருந்திருக்கும்.

இப் பகுதிகளில் வாழ்கின்ற எமது தமிழ் மக்கள், தமது காணிகளை மீட்டெடுப்பதற்காகவும், தமது காணிகளைத் தக்கவைப்பதற்காகவும் எல்லையில் நின்று போராடிக்கொண்டிருக்கின்றனர்.



அந்தவகையில் இங்குள்ள ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வாழ்கின்ற எமது தமிழ் மக்கள் அனைவரும் ஓர் உன்னதமான வீரர்களாவர்.

பின்னர் 2018ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின் படி வெலி ஓயாவில் 11,186 சிங்கள மக்கள் வாழ்வதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு குடியேற்றப்பட்டவர்களில் 3,363 பேருக்கு தற்போது வாக்குரிமையுள்ளது.

இதனால் தனித் தமிழ் சபையாக இருந்த கரைதுறைப்பற்று பிரதேச சபையில், தற்போது, 24 சபை உறுப்பினர்களில் நால்வர் சிங்கள உறுப்பினர்களாக உள்ளனர்.

இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்தில்கொக்குளாய் முகத்துவாரம் பகுதிகளிலும் சிங்கள மக்கள் குடியேறியுள்ளனர்.

வன்னி என்று எடுத்துக்கொண்டால் வவுனியாவில் 23,000சிங்கள வாக்குகள் உள்ளன. அங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலி ஓயா பகுதி போன்று, வவுனியா மாவட்டத்திலும் நாமல்கம, சிராந்திகம என பல்வேறு சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே இம்முறை வன்னியில் இருந்து, ஒரு சிங்கள பிரதிநிதி பாராளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக வன்னியில் 70 வீதமான தமிழர்கள் வாழ்கின்றனர். 20 வீதமானவர்கள் முஸ்லிம்கள், 10 வீதமானவர்கள் சிங்களவர்களாவர்.

எங்களுடைய தமிழ் மக்கள் வன்னியில் 70வீதமாக இருந்துகொண்டு, சிதறி நிற்கின்றோம்.

முஸ்லிம் மக்களோ, அல்லது சிங்கள மக்களோ எமது தமிழ்க் கட்சிகளுக்கு ஒருபோதும் வாக்களிக்கப்போவதில்லை. ஆனால் எமது தமிழ் மக்களிடம் வந்து வாக்குகளைப் பெற்று, தமிழர்களின் வாக்குப் பலத்தினை சிதறடிக்கும் வேலையினைச் செய்துவருகின்றனர் எனவும் தெரிவித்தார். (4-5)

## வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையத்திற்கான நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் வன்னேரிக்குளம் பகுதியில் இயங்கி வரும் வன்னேரிக்குளம் ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையத்திற்கு இதுவரை வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் இதனால் வன்னேரிக்குளம், ஜெயபுரம், ஆனை விழுந்தான், குஞ்சுக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளதுடன், நிரந்தர வைத்தியர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் முதியோர்களுக்கான சிகிச்சைகளுக்கு கூட அவர்களை பெரும் சிரமங்களுக்கும் மத்தியில் அக்கராயன்குளம் வைத்தியசாலை, கிளிநொச்சி வைத்தியசாலை என்பவற்றுக்கு கொண்டு செல்லவேண்டியுள்ளதாகவும் தெரியவருகிறது.

போக்குவரத்து வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக்காணப்படும் இந்த பிரதேச மக்களுக்கும் முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்படும் முதியோருக்கும் சிகிச்சை வழங்கக் கூடியவகையில் வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)




## கண்ணிவெடி அகற்றும் பணியின் போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் பெண்ணொருவர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இயக்கச்சி நித்தியவெட்டை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 8.45 மணியளவில் இயக்கச்சி - நித்தியவெட்டை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது எதிர்பாராத நேரத்தில் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது கிளிநொச்சி இரத்தினபுரத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான 35 வயது பெண் ஒருவரே முகத்தில் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-5-8-350)

## போக்குவரத்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க பொதுமக்கள் வேண்டுகோள்

(அக்கராயன்)

மன்னாரில் இருந்து முல்லைத்தீவிற்குப் பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர், முல்லைத்தீவு சாலை முகாமையாளர் ஆகியோரிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா காரணமாக இடைநிறுத்தப்பட்ட குறித்த பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கவில்லை எனவும் மூன்று மாதங்களுக்கு முன்னர் மன்னாரில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு சேவையைத் தொடங்கும் பேருந்து மன்னாரின் வெள்ளாங்குளம் வழியாக துணுக்காய், மாங்குளம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவினைச் சென்றடைவது வழமையாகும்.

ஆனால் தற்போது பேருந்து சேவை நடைபெறாத காரணத்தால் ஆசிரியர்கள் உட்பட பல உத்தியோகத்தர்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாங்குளத்தில் நீண்ட நேரம் பேருந்துக்காக காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது. தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் மாணவர்களும் பயணிப்பதில் நெருக்கடிக்குள்ளாவர்.

இலங்கை போக்குவரத்துச் சபை குறித்த விடயம் தொடர்பாகக்கூடிய கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-350)

## மன்னார் தேர்தல் மாவட்டத்தில் வாக்கெண்ணும் நிலையம் இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் தேர்தல் தொகுதிக்கான பிரதான வாக்கு எண்ணும் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட உதவித்தேர்தல் அதிகாரி ஜெ.ஜெனிற்றன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் பத்து வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்படும்.

ஆனால் இம்முறை அவை பதினைந்தாக அதிகரிக்கப்பட்டு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு வாக்கெண்ணும் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற மாதிரி வாக்கு எண்ணும் பணியின் போது மன்னார் மாவட்டச் செயலகத்தில் காணப்பட்ட இடப்பற்றாக்குறை காரணமாகவும் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (4-5-285)

## தேசிய கலை, இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கிளிநொச்சி)

"கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நடத்தப்படுகின்ற தேசிய கலை இலக்கிய விழாவிற்கான பிரதேச மட்ட போட்டிகளுக்கு ஆக்கங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

எனவே பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் துறை சார்ந்தவர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய சுற்று நிருபம் ஆகியவற்றை கலாசாரப் பிரிவில் பெற்று அதற்கான ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் திருமதி. பரமோதயன் அறிவித்துள்ளார். (5)

# பாரதம்

## குண்டர் குழுவினால் பொலிஸார் சுட்டுக்கொலை



(டில்லி)

உத்தரப்பிரதேசம்- கான்பூரில் 60 வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேக நபரான விகேஷ் துபேவை பிடிக்க முற்பட்ட டி.எஸ்.பி. உட்பட 8 பொலிஸாரை குண்டர்கள் சுட்டுக் கொன்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளதாவது, "60 வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேக நபரான விகேஷ் துபேவை, பொலிஸார் தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் பிகார் கிராமத்தில் குறித்த சந்தேகநபர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

குறித்த தகவலுக்கமைய நேற்று வெள்ளிக்கிழமை காலை 3.30 மணியளவில் 50 பேர் அடங்கிய பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இதனை அறிந்த சந்தேக நபரான விகேஷ் துபே உள்ளிட்ட குழுவினர் ஜே.சி.பி. இயந்திரத்தை வீதியின் குறுக்கே நிறுத்தி பொலிஸாரின் வாகனங்களுக்குத் தடையை ஏற்படுத்தினர்.

இதனால் பொலிஸார் வாகனத்தை விட்டு கீழே இறங்கி சுற்றிவளைப்பினை மேற்கொள்ள முயற்சித்தனர். இதன்போது உடனடியாகச்செயற்பட்ட குண்டர்கள் குழு 8 பொலிஸாரை சுட்டுக்கொன்றனர்.

காயமடைந்த பொலிஸார் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸார் அவர்களை தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## 350 யானைகள் மர்ம மரணம்

(கேபரான்)

ஆபிரிக்க நாடான போட்ஸ்வானாவில் கடந்த 2 மாதங்களில் 350 இற்கும் அதிகமான யானைகள் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளன.

உலகிலேயே அதிக யானைகளைக் கொண்ட நாடுகள் பட்டியலில் போட்ஸ்வானா முதலிடத்திலுள்ளது. அந்நாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான யானைகள் உள்ளன.

இந்நிலையில் அந்நாட்டின் ஒகவாங்கோ டெல்டா பகுதியில் உள்ள காடுகளில் கடந்த மே மாதம் முதல் மொத்தம் 350 யானைகள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதை வில ங்குகள் நல ஆர்வலர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

யானைகள் எப்படி உயிரிழந்துள்ளன என்பது குறித்து எந்தத் தகவலும் தெரியவில்லை. உயிரிழந்துள்ள யானைகளின் தந்தங்கள் வெட்டி எடுக்கப்படவில்லை. எனவே இவை வேட்டையாடப் படவில்லை.

ஆனாலும், பெரும்பாலான யானைகள் செங்குத்தாக தரையில் விழுந்தவாறு உயிரிழந்துள்ளன.

இதனால் நரம்பியல் தொடர்புடைய நோய் ஏதேனும் யானைகளுக்கு பரவி இருக்கக்கூடும் எனவும் அதன் காரணமாக யானைகள் இவ்வாறு உயிரிழந்திருக்கலாம் என வைத்தியர்கள் கருதுகின்றனர்.

இதையடுத்து, உயிரிழந்த யானைகளின் உடலில் இருந்து பரிசோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்காக தென்னாபிரிக்கா, சிம்பாவே, கனடா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (2)

## அமெரிக்காவை அலறவிடும் கொரோனா! ஒரு நாளில் மட்டும் 57 ஆயிரம் பேர் பாதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அசுர வேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றினால் நேற்று முன்தினம் மட்டும் 57,236 பேர் பாதிப்படைந்ததோடு 687 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவே அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கையாகும்.

இதன்மூலம் அமெரிக்காவில் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 28 இலட்சத்து 37 ஆயிரத்து 189 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 485 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 1,514,613 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 15,907 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை மொத்தமாக 1,191,091 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



## தென் சீனக் கடலில் போர்ப் பயிற்சி சீனாவின் செயலுக்கு பென்டகன் எதிர்ப்பு





(வோஷிங்டன்)

தென் சீனக் கடற்பரப்பில் சீனா போர்ப்பயிற்சி மேற்கொண்டு வருகிறது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தென் சீனக் கடற்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் முயற்சியில் சீனா ஈடுபட்டு வருகிறது. மேலும் அந்தக்கடற்பரப்பில் அமைந்துள்ள அண்டை நாடுகளான பிலிப்பைன்ஸ், வியட்நாம், ஜப்பான், தாய்வான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் சீனா அச்சுறுத்தலாகவும் விளங்கி வருகிறது.

இதற்கிடையில், தென் சீனக் கடற்பரப்பில் அமைந்துள்ள பரசல் தீவுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சீனா போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஆயுதம் தாங்கிய போர் கப்பல்களுடன் நடைபெற்று வரும் இந்த போர்ப்பயிற்சி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கடல் பரப்பில் உள்ள பரசல் தீவுகள் பகுதிகளில் சீனா போர்ப்பயிற்சியை மேற்கொள்வது பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக பிலிப்பைன்ஸ், தாய்வான் ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தென் சீனக் கடற்பரப்பின் சர்ச்சைக்குரிய பகுதியில் சீனா போர்ப் பயிற்சியில் ஈடுபடுவது மிகுந்த கவலை அளிக்கும் வகையில் உள்ளது என அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

மேலும், சீனாவின் இந்த போர்ப் பயிற்சி நடவடிக்கை தென் சீனக் கடற்பரப்பின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

தென் சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்கா-சீனா இடையே கடுமையான மோதல் போக்கு நிலவி வரும் நிலையில் அமெரிக்காவின் இராணுவத் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது. (2)

மியன

உயிர

(மிய
வடக
நிலச்ச
உயர்ந்
மத்திய
வருகி
கூடுெ

இந்த கே
மடைந்த 54
வைத்தியசால
கப்பட்டுள்ளன

பயங்க
1.1 பி
இத்த

இத்தாலி
பில்லியன் டெ
மாத்திரைகள்
செய்திகள் தெ
இத்தாலி
சலேர்னோ
கலன்களில்
ருந்த 14 தொ
மாத்திரைகள
மீட்டுள்ளனர்
ரைகளின் ம
டொலர் எனக்
இவ்வாறு
மாத்திரைக
சோதனைய
இத்தாலிய வ
தடவை. இந்

# வெளிநாடு

## மியன்மார் மரகதக்கல் சுரங்க நிலச்சரிவு

## உயிரிழந்தவர் எண்ணிக்கை 162 ஆக உயர்வு



(மியன்மார்)

**வடக்கு மியன்மாரில் மரகதக்கல் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 162 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மழைக்கு மத்தியிலும் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் உயிரிழப்பு எண்ணிக்கை இன்னமும் கூடுமென அஞ்சப்படுகின்றது.**

இந்த கோர விபத்தில் காயமடைந்த 54 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுரங்கப்பணிகளில் 200 இற்கும் அதிகமான சுரங்க தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்ததாக, தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டின் மிகப்பெரிய நகரமான யாங்கோனுக்கு வடக்கே 600 மைல் தொலைவில் உள்ள கச்சின் மாநிலத்தின் ஹெபகாந்தேரியா நகரத்தில் உள்ள சுரங்கத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த நிலச்சரிவு ஏற்பட்டது.

மியன்மார் உலகின் மிகப் பெரிய மரகதக்கல் மூலமாகும். அதன் சுரங்கங்களில் ஏராளமான விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.


இறப்பு எண்ணிக்கை மரகதக்கல் சுரங்கத் தொழிலில் மிக மோசமானதாக அறியப்படுகிறது. இது 2015 ஆம் ஆண்டு 113 பேரைக் கொன்ற விபத்தை பின்தள்ளியுள்ளது. (2)

## பயங்கரவாதிகளின் பண வசூலுக்கான 1.1 பில்லியன் போதை மாத்திரைகள் இத்தாலி துறைமுகத்தில் சிக்கின

இத்தாலி துறைமுகத்தில் சுமார் 1.1 பில்லியன் டொலர் மதிப்புள்ள போதை மாத்திரைகள் சிக்கியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாலி நாட்டில் உள்ள ஸலேர்னோ துறைமுகத்தில் கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 தொன் ஆம்படமைன் போதை மாத்திரைகளை இத்தாலிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தப் போதை மாத்திரைகளின் மதிப்பு சுமார் 1.1 பில்லியன் டொலர் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு பாரிய தொகை போதை மாத்திரைகள் இத்தாலியில் ஒரே சோதனையில் சிக்கி இருப்பது இத்தாலிய வரலாற்றில் இதுவே முதல் முறை. இந்த போதை மாத்திரைகள்,



ஒட்டுமொத்த ஐரோப்பிய சந்தையையும் திருப்திப்படுத்த போதுமானவை என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்டுள்ள போதை மாத்திரைகள், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பதற்காக சிரியா நாட்டில் தயாரிக்கப்பட்டவை என தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## போதைப் பொருள் மறுவாழ்வு நிலையத்தில் துப்பாக்கிச் சூடு கொடூரத் தாக்குதலில் சிக்கி 24 பேர் உயிரிழப்பு!

(மெக்ஸிக்கோ சிட்டி)

மத்திய மெக்ஸிக்கன் நகரமான இராபுவாடோவில் போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்தில் துப்பாக்கி ஏந்தியவர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 24 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மெக்ஸிக்கோவின் இராபுவாடோவில் கடந்த புதன்கிழமை நடந்த தாக்குதல் குறித்து, குவானாஜுவாடோ மாநில பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன், இந்த தாக்குதலில் காயமடைந்தவர்களில் 3 பேர் மோசமான நிலையில்



உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி ஆண்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர், 19 மாதங்களுக்கு முன்னர் பதவியேற்றதில் இருந்து பதிவு செய்யப்பட்ட மிக மோசமான படுகொலையாக இது விபரிக்கப்பட்டுள்ளது. (2)

## வீரியம் மிக்க வைரஸின் ஊடுருவலை தடுத்து விட்டோம் இது எமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்

### வடகொரிய ஜனாதிபதி கிம் பெருமிதம்

(பியாங்யாங்)

கொரோனா வைரஸ் ஊடுருவாமல் வடகொரியா தடுத்து விட்டதாக அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் உலக நாடுகள் விழிபிதுங்கி நிற்கும் நிலையில், தங்கள் நாட்டில் கொரோனாவை கட்டுப்படுத்தி விட்டதாக வட கொரிய அரசு கூறி வருகிறது. சீனாவில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியவுடன் வட கொரியா சர்வதேச விமானப் போக்குவரத்தை நிறுத்தி விட்டது.

இந்நிலையில், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன், ஆளும் தொழிலாளர் கட்சியின் பொலிட்பீரோ கூட்டத்தில் பேசிய போது, கொரோனா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்திவிட்டதாக தெரி



வித்துள்ளார்.

உலகளாவிய சுகாதார நெருக்கடி இருந்த போதிலும், வீரியம் மிக்க வைரஸின் ஊடுருவலை நாங்கள் முற்றிலுமாகத் தடுத்துள்ளோம். தொற்றுநோய்க்கு எதிரான ஒரு நிலையான சூழ்நிலையை பராமரித்துள்ளோம், இது ஒரு பிரகாசமான வெற்றியாகும்.

அதேசமயம் தொற்று நோய்க்கு எதிரான முயற்சியில் சுய-மனநிறைவு அடைந்து விட்டதாக கருதக் கூடாது. இன்னும் அதிகபட்ச எச்சரிக்கையுடன் மக்கள் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டியதுடன், 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகள் ஊரடங்கு கட்டுப்படுகளை தளர்த்தி உள்ளன. இந்த சூழ்நிலையில், வடகொரியாவில் நடந்த ஆளுங்கட்சி பொலிட்பீரோ கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

வடகொரியாவில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் பொது இடங்களில் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும் என உத்தரவிடப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வடகொரியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை என்றும் இதுவரை பரிசோதிக்கப்பட்ட 922 பேருக்கும் பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் பொது சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. துறைமுகங்கள் மற்றும் நில எல்லைகளில் சரக்கு கையாளுபவர்கள் என நூற்றுக் கணக்கான மக்கள் தொடர்ந்து கண்காணிப்பதற்காக தனிமைப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

ல் உள்ள
ரில் சீனா
காள்வது
விளங்
ம், தாய்
தெரிவித்
ன் சீனக்
ரிய பகுதி
ற்சியில்
ல அளிக்
து என
வ தலை
தெரிவி
த பேரர்ப்
ன் சீனக்
மையை
செய்துள்
ரத்தில்
யே கடு
த நிலவி
காவின்
க்கப்பட்
ரு நாட்
றத்தை
(2)

# தேர்தலில் வென்றதன் பின்னர் புதிய யுகத்தை ஏற்படுத்துவோம்

## சுஜீவ திட்டவட்டம்



**(கொழும்பு) தேர்தலில் வென்றதன் பின்னர் புதிய யுகத்தை ஏற்படுத்துவோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.**

நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஐக்கிய மக்கள் சக்தி 115 ஆசனங்களை கைப்பற்றும்.

சில ஊழல் அரசியல் வாதிகளின் அரசியல் பயணத்திற்காக மக்களில் சிலர் அடிமைகள் போன்று செயற்பட்டு இனவாதத்தை தூண்டுகின்றனர்.

காடையர்கள், கப்பம் பெறுபவர்கள், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும்"என அவர் தெரிவித்தார்.(ஜ-4)

# பளுதூக்கிகளை பொருத்த பிரதமர் இணக்கம் பணிப்புறக்கணிப்பை கைவிட்டது தொழிற்சங்கம்

(கொழும்பு)

தமது பணிப்புறக்கணிப்பை முழுவதுமாக கைவிட துறைமுக தொழிற்சங்கம் இணங்கியுள்ளது:

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் துறைமுக தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்த



தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின் போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்த பளுதூக்கிகளை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் .பொருத்த பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

அதன்படி, தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைமுழுவதுமாககைவிட துறைமுக தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.(ஜ-4)

# கொரோனா நோயாளி அடையாளம் 154 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பு -ஜிந்துபிட்டியில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நோயாளியொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பகுதியில் வசிக்கும் 29 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் தனிமைப் படுத்தலுக்காக தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என அப்பகுதியின் பொதுச் சுகாதார சேவையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த இலங்கையர் ஒருவரே இவ்வாறு கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நபர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து, கொழும்பு - ஜிந்துபிட்டியிலுள்ள அவரது வீட்டுக்குத் திரும்பியிருந்த நிலையில், அவரது வீட்டில் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அந்த தனிமைப்படுத்தல் நிறைவடைந்த பின்னர் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக அப்பகுதியின் பொதுச் சுகாதார சேவையாளர் தெரிவித்துள்ளார்.(ஜ-4)

# ஜப்பானிலிருந்து 261 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜப்பானில் சிக்கியிருந்த 261 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

ஶ்ரீலங்கன் விமான சேவையின் விசேட விமானத்தின் ஊடாக ஜப்பானின் தலைநகர் டோக்கியோவின் நரிடா விமான நிலையத்தில் இருந்து அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நாட்டுக்கு அழைத்துவரப் பட்டனர்.

இவ்வாறு வருகை தந்துள்ள 261 பேருக்கும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து, பி.சி. ஆர்.பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்களை விமானநிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் சிக்கியிருக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இருமல்!

இருமல் என்று சொல்கிறோம் அல்லவா. (cough) அதிலே முக்கியமாக இரண்டு வகை உண்டு. சில இருமல் ரசிக்கிறமாதிரி இருக்கும். அது சங்கீத இருமல். சில அவஸ்தையாக இருக்கும். அது சங்கட இரும்ல்.மருத்துவ ரீதியாக இருமலை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அதாவது சிலவகை இருமலுக்கு நாம் வைத்தியரை தேடிப் போவது அநாவசியம். சில வகை இருமலுக்கு நாம் வைத்தியரிடம் போவது ரொம்ப அவசியம்.

சரி, இருமல் வருவதற்கு என்ன காரணம்? அதற்கு ஏகப்பட்ட காரணம் உண்டு. சுவாசப் பாதையில் ஏற்படுகின்ற உறுத்தல் தூசு அதிகமாக உள்ள சூழ்நிலை. உணவுப் பொருட்கள் தவறிப் போய் மூச்சுப் பாதையில் நுழைந்து விட்டால் அதை வெளியே தள்ள தும்மல் வரும். கடுமையாக உணர்ச்சிவசப்படுவது, சிறுநீரகம் செயலிழப்பது, மார்பு எலும்புகளிலே ஏற்படுகின்ற காயம் இதனால்கூட இருமல் வரலாம். சிலவகையான நோய்களுக்கு இருமல் ஒரு முதல் எச்சரிக்கை.

நிமோனியா, ஆஸ்துமா, காசநோய், நுரையீரல் புற்றுநோய் இவையெல்லாம் அதற்கு உதாரணம். சரி, எதுமாதிரியான இருமலுக்கு வைத்தியரைப் பார்க்க வேண்டும். இருமலுடன் சேர்ந்து காய்ச்சல் இருந்தால் அதுவும் முக்கியமாக குழந்தைகளுக்கு இப்படி இருந்தால் முதல் நாளே வைத்தியரைப் போய் பார்ப்பதே நல்லது. இருமும் போது இரத்தம் வந்தாலும் அது கவனிக்க வேண்டிய விடயம். புகை பிடிப்பவர்களுக்கு இப்படி இருந்தால் அது Bronchitis இற்கு அடையாளம்.

நெஞ்சுவலி, விழுங்குவதிலே கஷ்டம், மூச்சு விடுவதில் சிரமம் இப்படியெல்லாம் இருந்தால் வைத்தியரைப் பார்ப்பது அவசியம். இது மாதிரி எதுவும் இல்லாமல் வெறும் இருமல்கூட நான்கு நாட்களுக்கு மேலே நீடித்தால் வைத்தியரைப் பார்க்கலாம்.

சின்னக் குழந்தைகள் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நிலக்கடலை, சட்டைப்பொத்தான், பென்சில் முனை இப்படி ஏதாவது விழுங்கியிருந்தால் அது மூச்சுப் பாதையிலே இருந்து கொண்டு தும்மலை உருவாக்கும். குழந்தைக்கு இதைச் சொல்லத் தெரியாது. நாமாகத்தான் புரிந்து கவனித்துக் கொள்ள வேண்டும்.

நாம் பயப்படத் தேவையில்லாத இருமல் எது தெரியுமா? சில பொருட்கள் நம் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் ஒவ்வாமையாலேயே இருமல் வரும். தும்மல் வரும். அது எது என்பதை நாம்தான் கண்டு பிடித்து நீக்க வேண்டும். இருமலுடன் ஜலதோசம் சேர்ந்து வரும் பாருங்கள். இதற்கு வைத்தியரிடம் போக வேண்டாம். ஒரு கேற்றிலிலே தண்ணீரைக் கொதிக்க வைத்து அந்த ஆவியை மூக்கு வழியாக உள்ளுக்கு இழுக்கலாம்.

ஒரு நான்கு நிமிடம் இப்படிச் செய்தால் போதும். Pressure cooker இலே தண்ணீரை வைத்து அடுப்பை இலேசாக எரிய வைத்து அதிலே வருகின்ற நீராவியைப் பிடிக்கலாம். அரை அடிக்கு தூரத்திலே இருந்து மூச்சு இழுக்கலாம்.

குழந்தைகளுக்கு இந்த வைத்தியம் வேண்டும். சூடான திரவங்கள் நிறையச் சாப்பிடலாம். ஒரு தேக்கரண்டி தேன் சாப்பிடலாம். தொண்டை இதமாகும். சிலபேர் இருமல், தும்மலுக்கு மார்பிலேயும் கழுத்திலேயும் மருந்து தடவுகிறார்களே. அது பிரயோசனப்படாது. அது ஒரு Psychogical feeling மருந்து தடவிய இடத்திலே எரிச்சலை உருவாக்கும். இந்த எரிச்சலை மூளை அதிகமாகக் கவனிக்கும். இதனால் இருமல், தும்மல் அவஸ்தையை அது மறந்துவிடும்.

சிலபேருக்கு இந்த மருந்துகூட அலர்ஜிக் ஆகிவிடும். சாதாரணமாக நமக்கு இருமல், தும்மல் வராமல் இருக்க நாம் என்ன செய்யலாம்? நம் உடம்பிலே உள்ள எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு வழி சத்துள்ள ஆகாரம், உடற்பயிற்சி, புகைப்பழக்கத்தை விடுவது, மதுப்பழக்கத்தை குறைப்பது, வேகமாக நடப்பது இவையனைத்தும் சுவாசப்பை அமைப்பை வலுப்படுத்தும்.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று சொல்கின்றோம் அல்லவா...அதுமாதிரி தும்மலைக் கண்டாலும் தூர விலகுவது நல்லது. ஒரு தும்மலால் கோடிக்கணக்கான வைரஸ் கிருமிகள் வெளியே வருகின்றன. அடுத்தவர்களிடம் இந்தக் கிருமி சுலபமாகத் தொற்றிவிடும்.

ஜலதோசம், இருமல் உள்ளவர்கள் உபயோகப்படுத்தும் கைக்குட்டை, துவாய் இவற்றையெல்லாம் தொடாமல் இருப்பது நல்லது. ஒரு தபால் அலுவலகத்திலே ஒருத்தர் ரொம்ப அக்கறையாக ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே மிக நெருக்கமாக இருந்து கவனித்துக் கொண்டிருந்தார். சும்மா கவனித்துக் கொண்டிருந்த இவர் திடீரென்று தும்மினார். எழுதிக்கொண்டிருந்தவர் விலகி ஓட ஆரம்பித்தார். அவர் ஓட ஓட இவரும் அவரைத் துரத்திக்கொண்டே ஓடினார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருத்தர் இவரை வழிமறித்துக் கேட்டார். "ஏன் உங்கள் தும்மலுக்குப் பயந்து கொண்டுதானே அவர் ஓடுகின்றார். அவரை ஏன் அநாவசியமாகத் துரத்துகின்றீர்கள்?'' என்றார்.

இதற்கு அவர் அப்படியில்லை...அந்த ஆள் என் பேனாவை வாங்கி கடிதம் எழுதினார். அதைக் கொடுக்காமல் எடுத்துக் கொண்டு ஓடுகிறார். அதனால்தான் துரத்துகின்றேன் என்று சொல்லிவிட்டு தொடர்ந்தும் ஓட ஆரம்பித்தார்.

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதன் நோக்கம் என்ன?

ஜே.வி.பி. கேள்வி



(கொழும்பு)

**நிர்வாக முகாமைத்துவத்திற்காக மாத்திரமே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவிற்கு கையளிக்கப்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. அவ்வாறெனில் நிர்வாக முகாமைத்துவத்தைக் கூட முன்னெடுக்க முடியாதளவிற்கு அரசாங்கம் செயற்றிறனற்றுப் போயுள்ளதா? என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கேள்வியெழுப்பினார்.**

மேலும், எம்.சி.சி. ஒப்பந்தத்தை இரத்துச் செய்வது இலகுவானதல்ல என்று அரசாங்கம் கூறுகிறது. அவ்வாறெனில் ஜனாதிபதித் தேர்தலின் போது இதனை இரத்துச் செய்வதாக ஏன் மக்களுக்கு போலியான வாக்குறுதியளிக்கப்பட்டது என்பதை அரசாங்கம் கூற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் ராஜபக்ஷக்கள் நாட்டை நேசிப்பவர்கள் அல்லர். நாட்டை அந்நியர்களுக்கு விற்றேனும் தாம் வாழ வேண்டும் என்று எண்ணுபவர்களாவர். அதன் காரணமாகவே தற்போது அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இலங்கை கீழ்ப்படிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாக இந்தியாவிற்கு விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் அதனை மறைத்து நிர்வாக முகாமைத்துவத்திற்காக மாத்திரமே இந்தியாவிடம் கிழக்கு முனையம் வழங்கப்படுவதாகக் கூறி மக்களை அரசாங்கம் ஏமாற்றுகிறது.

வெளிநாடொன்றில் உதவி இன்றி நிர்வாக முகாமைத்துவத்தை முன்னெடுப்பதற்குக் கூட அரசாங்கம் திறனற்றுப் போயுள்ளதா? நிர்வாக முகாமைத்துவத்திற்கான அனைத்து வசதிகளும் திறன்களும் இலங்கையிடம் காணப்படுகின்ற போதிலும் அதனை இந்தியாவிற்கு வழங்குவது பாரதூரமானதாகும். இதற்கு துறைமுக ஊழியர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தபோதிலும் அதனை உதாசீனம் செய்து அரசாங்கம் தன்னிச்சையாக தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ராஜபக்ஷக்களின் பிரதான பேசுபொருளாக மிலேனியம் சவால் (எம்.சி.சி.) ஒப்பந்தமே காணப்பட்டது. ஆனால் தற்போது அதனை இரத்து செய்வதற்கான செயற்பாடுகள் அரசாங்கத்தால் திட்டமிட்டு பிற்போடப்படுகின்றன. ஆட்சிக்கு வந்தவுடன் எம்.சி.சி. ஒப்பந்தத்தை கிழித்தெறிவதாகக் கூறியவர்கள் தற்போது அதில் 30 வீதம் மாத்திரமே குறைபாடுகள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

அரச தரப்பினர் சிலர் இது பற்றி பேசுவதையே கைவிட்டுள்ளனர்.

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் அரசாங்கத்திற்கு அமெரிக்காவிடமிருந்து 680 மில்லியன் டொலர் கிடைக்கப் பெறும்.

ஆனால் இதன்மூலம் இலங்கை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அமெரிக்காவினால் மிக இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே ஒப்பந்தத்தில் உடன்பாடு இல்லையெனில் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எம்.சி.சி. நிறுவனத்திற்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவித்து அதிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஆட்சியை கைப்பற்ற எம்.சி.சி. உடன்படிக்கையைப் பயன்படுத்தியதைப் போன்று தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் மாத்திரமே இதனை இரத்து செய்ய முடியும் என்று கூறி மக்களை ஏமாற்றுகின்றனர் என அவர் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

## புதுவகை கறுப்பு வண்ணத்துப்பூச்சிகள்; அச்சத்தில் பொலநறுவை விவசாயிகள்



(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தின் மெதிரிகிரிய மற்றும் லங்காபுர ஆகிய பிரதேசங்களில் உள்ள சில கிராமங்களில் கடந்த சில தினங்களாக மின் கம்பங்கள் மற்றும் தென்னை மரங்களில் ஒருவகை கறுப்பு நிற வண்ணத்துப்பூச்சிகளை அதிகளவில் காணமுடிவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

மெதிரிகிரிய பிசோபங்கடா, அமுனுகம மற்றும் லங்கா புர பிரதேசத்தின் வீரபுர, வீர உதாரகம ஆகிய பகுதிகளில் இந்த வண்ணத்துப்பூச்சிகளை காணக் கூடியதாக உள்ளது.

மின் கம்பங்கள் மற்றும் தென்னை மரங்களில் தங்கியிருக்கும் இந்த வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

பிரதேசத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு இந்தப் பூச்சிகளால் பாதிப்பு ஏற்படுமா? என்பதை ஆராய்ந்து பார்க்குமாறு பிரதேசவாசிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-8)

பாகிஸ்தான் வரலாற்றில்

## லெப்டினன்ட் ஜெனரலாக முதல் பெண் நியமனம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவம் முதன்முறையாக ஒரு பெண் அதிகாரியை லெப்டினன்ட் ஜெனரலாக நியமித்துள்ளதாக அந்நாட்டு இராணுவத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தில் ஏற்கனவே மேஜர் ஜெனரலாக பதவிவகித்த பெண் அதிகாரியான நிகர் ஜோஹர் கடந்த செவ்வாய்க்கிழமை லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, மூன்று நட்சத்திர ஜெனரலின் பதவியைப் பெற்ற மேஜர் ஜெனரல் நிகர் ஜோஹர், பாகிஸ்தான் இராணுவத்தின் முதல் பெண் அறுவைச் சிகிச்சை தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் தந்தை மற்றும் கணவர் என இருவரும் இராணுவத்தில் பணியாற்றியுள்ள நிலையில், ஜோஹர் 1985 ஆம் ஆண்டில் ராவல் பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று பாகிஸ்தான் இராணுவத்தின் மருத்துவப் படையில் சேர்ந்துள்ளார்.

இதனையடுத்து 2017 ஆம் ஆண்டில், பாகிஸ்தான் இராணுவத்தில் மேஜர் ஜெனரல் பதவியை அடைந்த மூன்றாவது பெண் அதிகாரியானார்.

இதற்கு முன்பாக பாகிஸ்தான் இராணுவத்தில், ஷாஹிதா பாட்ஷா மற்றும் ஷஹிதா மாலிக் ஆகிய இரண்டு பெண்கள் முக்கிய தளபதிகளாக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கணவனால் மனைவி அடித்துக் கொலை

(கொழும்பு)

குடும்பத் தகராறு காரணமாக கணவனால் அவரது மனைவி பொல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் பன்னல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்பல்ல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த தாக்குதலில் 28 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்காக பன்னல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மங்கபார வயல் ஒன்றுக்கு அருகில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டதில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் படுகாயமடைந்த 42 வயதுடைய நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (ஜ-2)


## அத்தியட்சகராக பதவியுயர்வு



(கிண்ணியா)

இலங்கை மின்சார சபையின் கிண்ணியா மின் பாவனையாளர் அலுவலகத்தில் கடமையாற்றிய கிண்ணியா, காக்காமுனை பகுதியைச் சேர்ந்த எம்.எம். முஹம்மட் மிக்ராக், கிழக்கு மாகாணத் திட்டமிடல் பிரிவின் திருகோணமலை மாவட்டத் திட்டமிடல் அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்றுள்ளார். (ஜ-4)

# விசாரணைகள் அனைத்தும் நிறைவடைந்ததும் உண்மைகள் வெளிவர வாய்ப்பு ஏற்படும்



## வாக்குமூலத்தின் பின் சங்கக்கார உறுதி

(கொழும்பு)

**விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்ததும் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் குற்றச்சாட்டுகள் மீதான உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என நான் நம்புகின்றேன் என குமார் சங்கக்கார உறுதிபடத் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் விளையாட்டமைச்சின் விசேட பிரிவின் முன்னிலையில் 9 மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்த பின்னர் செய்தியாளர்களிடம் குமார் சங்கக்கார கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த சங்கக்கார,

இல்லை, அப்பதவிக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்படுவதில்லை, அதற்கு வேறு விதமான நடைமுறைகள் உள்ளன. எனினும் தற்போது நான் ஐ.சி.சி.தலைவர் பதவி குறித்து சிந்திக்கவில்லை. அதனை விட முக்கியமான வேறு ஒரு விடயம் எனக்கு உள்ளது என்றார்.

மேலும், குறித்த ஊடகவியலாளர் உங்களுக்கு ஐ.சி.சி. தலைவர் பதவி கிடைத்தால் ஏற்றுக்கொள்வீர்களா? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த சங்கக்கார, இல்லை, எதனையும் செய்வதற்கு எனக்கு அதிக காலம் இல்லை. முதலில் எனக்கு இருக்கும் முக்கிய பொறுப்புகளை நான் சரியாக நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

2011 உலகக்கிண்ண இறுதி கிரிக்கெட் போட்டியில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளதென முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் பகிரங்கமான குற்றஞ்சாட்டினையடுத்து விளையாட்டு குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு தொடர் வாக்குமூலங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் விளையாட்டு குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, சுமார் 9 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர், கடந்த 2 ஆம் திகதி அங்கிருந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வரட்சி 58 ஆயிரம் பேர் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 17 ஆயிரத்து 936 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 915 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சி காரணமாக அவர்கள் குடிநீர் இன்றி கடும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியுடனான காலநிலை காரணமாக நிலத்தடி நீர் குறைவடைந்தும் ஆறுகள், குளங்கள், நீர்நிலைகள் நீர் வற்றியும் மக்களுக்கான குடிநீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஊடாக கொள்கலன்கள் மூலம் குடிநீரை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-8)

## றம்புட்டானால் பறிபோன குழந்தையின் உயிர்!

(கொடபொல)

கொடபொல, இலுக்பிடிய பிரதேசத்தில் 11 மாதக் குழந்தையொன்று றம்புட்டான்விதை தொண்டையில் சிக்கியதில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

குழந்தை சிகிச்சைக்காக தெனியாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

வைத்தியசாலையில் உரிய சிகிச்சை பெற்றுக் கொடுக்கப்படவில்லை என தெரிவித்து குழந்தையின் உறவினர்கள் வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் அதன் சொத்துக்களைத் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில், வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெனியாய பொலிஸாரினால் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மொரவக நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஜ-4)

## போதைப்பொருட்களுடன் 439 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் நள்ளிரவு வரையிலான காலப்பகுதியில் போதைப்பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 439 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இக்காலப்பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் மோசடியுடன் தொடர்புடைய 239 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 199 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் தொடர்புடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ஜ-8)

## தும்பியினங்கள் படையெடுப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சிறிய வெட்டுக்கிளி வகையைச் சேர்ந்த தும்பி இனங்கள் படையெடுத்துள்ளன.

திருகோணமலை கரையோரப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் இத்தும்பி இனங்கள் பறந்து திரிவதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்கரை பகுதியிலிருந்து புல்மோட்டை வரையான கடற்கரையோரங்களில் இத்தும்பி இனங்கள் பறந்து திரிகின்றன.



நேற்று முன்தினம் மாலையிலிருந்து நேற்று வரை இத்தும்பி இனங்கள் கடற்கரையோரப் பகுதிகளில் பறந்து திரித்துள்ளன.

மேலும், இலட்சக்கணக்கான தும்பி இனங்கள் இரைச்சலுடன் உயரத்தில் பறந்து திரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவொன்றை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கொரோனா காலப்பகுதியில் அவர்கள் வீடுகளில் இருக்கும் காலப்பகுதியிலேயே இந்த கொடுப்பனவு வழங்கப்படுவதாக கல்வியமைச்சு கூறியுள்ளது.

முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தமது கல்வியியல் டிப்ளோமாக்களை நிறைவு செய்வதற்கு எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி வரை இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## ஒரு இலட்சத்தை எட்டும் தங்கத்தின் விலை

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை, வரலாற்றில் இல்லாதளவு உச்ச விலையைத் தொட்டு வருகின்றது.

அதனடிப்படையில் இலங்கையில் 24 கரட் தங்கத்தின் விலை 93 ஆயிரத்து 500 ரூபாவை எட்டியுள்ளது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால் இலங்கையில் தங்கத்தின் விலை விரைவில் ஒரு இலட்சத்தை தாண்டும் என தங்கம் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சர்வதேச சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 789 டொலராக காணப்படுகின்றது. (ஜ-4)



# ஆன்மீகம்

## செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்



அழியாத திருக்குறள் செல்வத்தை நமக்கெல்லாம் வாரி வழங்கியவர் வள்ளுவர் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' - என்ற குறளுக்குரிய இலக்கணத்திலேயே குறளை வாழ்த்திக் குரல் கொடுக்கிறார் பாரதியார். 'குறள் செல்வம்' தந்த வள்ளுவர் மேலான செல்வமாகக் குறிப்பிடுவது எதைத் தெரியுமா? செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை. 'கற்றலின் கேட்டல் நன்று' என்கிறது நீதிநூல். அறிவை இரு வாசல்கள் மூலமாக நாம் அனைவரும் அவசியம் பெற வேண்டும். கற்பதும் கேட்பதுமே அவை. அனைத்து வசதி வாய்ப்புகளும் ஒருவருக்கு அமைந்தாலும் அறிவு விரிவு பெறாவிட்டால் அவரால் முன்னேற முடியாது.

அறிவு உடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடையரேனும் இலர். ஒருவரிடம் நாம் உரையாடிக்கொண்டிருக்கும்போது நமக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு விடயத்தைத்தான் விபரித்துக் கொண்டிருப்போம். ஆனால் ஒருவர் சொல்வதை நாம் கேட்கும்போதோ புதிய ஒரு செய்தியைக் கற்றுக்கொள்கிறோம். இதுவே செவிச்செல்வத்தின் கீர்த்தி! இளமையில் கல்வி பெறாதவர்களும் அறிவு பெற ஒரே வழி சான்றோர்களிடம் கேட்டு அறிவதுதான். மொகலாயப் பேரரசர்களில் புகழ்பெற்ற அக்பரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் அவர் எழுதப்படிக்கத் தெரியாதவர் என்று எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆம்! அக்பர் படிப்பு வாசனை அறவே பெறாதவர்தான். வேட்டையாடவும் போரிடவும் மட்டுமே கற்றவர். இலக்கியம், கலைநுட்பம், கட்டட இயல், இசை, அரசியல் நுணுக்கம் அனைத்தையும் செவிவழியான அனுபவத்திலேயே பெற்றார். தன் மனைவியைப் படிக்கச் சொல்லி தினமும் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம் அக்பர். கற்றிலன் ஆயினும் கேட்க என்கிறார் வள்ளுவர். 'படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு! பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு!' என்று பாடுகிறார் கவியரசர் கண்ணதாசன். இளம் வயதில் ஏற்ற சூழ்நிலை அமையாமல் கல்வி கற்காமல் ஒருவன் இருந்துவிட்டாலும் கற்ற பெரியவர்களை அணுகி அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் முயற்சியில் அவன் அவசியம் ஈடுபட வேண்டும்.

இன்று பல்வேறு துறைகளில் பளிச்சிடும் பலபேர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் அல்லர். உலக வாழ்க்கைப் பள்ளியிலே மாணவனாக ஒவ்வொரு கணமும் இருந்து தத்தம் துறை நுட்பங்களை வல்லுநர்களின் வசம் சென்று சென்று கேட்டு கேட்டுத் தெளிந்தவர்கள்தான்! கற்றவர்கள் மேலும் மேலும் விளக்கம் பெறவும் கல்லாதவர்கள் தெளிவு பெறவும் உற்ற துணையாவது செவிச்செல்வமே! பல பட்டங்களைப் பெற்ற ஒருவர் தன் நண்பரிடம் சொன்னார்... 'நீங்கள் மேலும் என்னைப் போல் படிக்கலாமே! நான் கற்றதே கை மண் அளவுதான்! கல்லாதது உலகளவு! சற்று விசமத்தனமாக பேசியவர்க்கு பதில் அளித்தார் மற்றவர்.

'கற்றது கை மண் அளவு' என்று சொல்வதற்கும் நமக்கெல்லாம் தகுதி கிடையாது. கைப்பிடியில் இருக்கும் மண் துகள்களுக்குள் ஒரு துகள் அளவுகூட நாம் படிக்கவில்லை. ஏனென்றால் 'கற்றது கை மண் அளவு' என்று சொல்வது யார் தெரியுமா? வெள்ளைத் தாமரைப் பூவில் வீணை இசைத்துக்கொண்டிருக்கும் கல்வித்தேவதையான கலைமகள் கூறிய சொல் அது. நாமும் அதைச் சொன்னால் சரஸ்வதி தேவி அளவுக்கு நாமும் படித்திருக்கிறோம் என்றல்லவா ஆகிவிடும். கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்று உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்!

# நயினை நாகபூஷணிக்கு இன்று தீர்த்தத் திருவிழா



## நோய் தீர்க்கும் தாயே!

ஆடி வருகிறாள் அம்மா ஆடி வருகிறாள்
மஞ்சள் பாம்பினிலே தோஷம் தீர்க்க ஆடி வருகிறாள்!
ஓடி வருகிறாள் அம்மா ஓடி வருகிறாள்
மஞ்சள் குடையுடனே நோய் தீர்க்க ஓடி வருகிறாள்!
பாடி வருகிறாள் அம்மா பாடி வருகிறாள்
மஞ்சள் மாலையோடு பசி தீர்க்கப் பாடி வருகிறாள்
நாடி வருகிறாள் அம்மா நாடி வருகிறாள்
மஞ்சள் பட்டுடனே எமை அணைக்க நாடி வருகிறாள்!
பாலர் நாங்கள் படகினிலே ஆடி வந்தோமே
அமுத சுரபி அமுதுண்ண ஓடி வந்தோமே!

உருத்திரன் சஞ்சுதன்
மானிப்பாய்.

## நயினை உறை நாயகியே!

ஐந்து தலை நாகம் குடைபிடிக்க
அன்பர்க்கு அருள் வழங்கும் அம்மை நீயே
பதினெட்டாம் பதியுறைந்து அமர்ந்து
பக்தர்களை கவர்ந்திழுக்கும் சக்தி நீயே
கடல் கடந்து ஓடிவரும் அடியவர்க்கு
கருணைகாட்டி அரவணைக்கும் அன்னை நீயே
இருகரங்கள் குவித்துன்னை எந்தநாளும்
இரந்துநிற்பேன் அருள் எனக்கு தருவாய் நீயே

ஆதிலட்சுமி சிவகுமார்.

## உனையின்றி யார் காப்பார்

நயினை வாழும் அன்னையே
நாளும் தொழுவோம் உன்னையே
தமிழர் வாழும் இம் மண்ணில்
நாம் தாழும் நிலை பாராயோ

கொடுமைகள் அனைத்தும்
நமக்கன்றோ
செய்வோர் கூட்டம்
அறியாயோ
கொடியவர் கொட்டம்
அடங்கிடவே
நன்மைகள் நமக்கு
தாராயோ

நல்லூர்-தேன் நிலா.

## கொடியேறி முடிகின்ற தீர்த்தம்

கொடியேறி முடிகின்ற தீர்த்தம்
விடிவினைத் தரவேண்டும் தீர்த்தம்
முடிவில்லாத் தொடர் கதைத் துயரம்
அடியார் தம் வாழ்வில் எப்போது உயரம்
வடிவழகி எங்கள் நாகபூஷணி
கடலாடி வருகிறாள் தீர்த்தம்
ஆடுவோம் நாமுமே தீர்த்தம்
தேடுவோம் எம் வாழ்வில் நல்மூர்த்தம்

புலோலியூர் வேல்நந்தன்.

# மீன்பிடித்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் வெடிபொருட்களுடன் படகொன்று பறிமுதல்



(திருமலை)

கடந்த முதலாம் திகதி திருகோணமலை, எரக்கண்டி கடற்கரை பகுதியில் மேற்கொண்டுள்ள சோதனை நடவடிக்கையின் போது டிங்கி படகொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி திருகோணமலை, எரக்கண்டி கடற்கரை பகுதியில் மேற்கொண்ட போது ஒரு டிங்கி படகு அருகில் இருந்து அவசரமாக நிலத்தை அடைந்த நபரை கடற்படை கண்டறிந்தது.

இதனையடுத்து, கடற்படைப் பணியாளர்கள் சந்தேகத்தின் பேரில் குறித்த டிங்கி படகை சோதனை செய்தனர்.

அப்போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்ட 3 சார்ஜர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஆறு (6) வாட்டர் ஜெல் குச்சிகள், 3 பாதுகாப்பு உருகி மற்றும் 3 மின்சாரமற்ற டெட்டனேட்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

# அப்போ பிக்போஸ் இப்போ என்வாழ்வின் வில்லி

## புலம்பும் பீற்றர் மனைவி

வனிதாவின் திருமணம் தான் தற்போது சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய சர்ச்சையாக விவாதிக்கப்பட்டு வருகிறது. வனிதா - பீட்டர் போல் திருமணம் சட்டத்துக்குப் புறம்பானது எனப் புகார் கொடுத்திருக்கிறார் பீட்டர் போலின் மனைவி எலிசபெத்.

அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, "வனிதாவை ஒரு சினிமாப் பிரபலமாகத்தான் எங்களுக்குத் தெரியும்.அவரிடம் பேசியதோ, பழகியதோ கிடையாது. இந்தத் திருமணம் நடப்பதற்கு முன்னர் என் பையனைப் பார்க்க வேண்டும் என்று அவரிடம் வனிதா சொல்லியிருக்கிறார். அதனால், என் பையனை மட்டும் அவர் அழைத்துச் சென றார். ஒரு சினிமா பிரப லத்தைப் பார்க்கிறோம் என்கிற ஆசையில் என் பையனும் சென்று வந்தான். அப்போதுவனிதாவை அன்ரி என்று கூப்பிட்டிருக்கிறான். "ஏன்.. அன்ரி என்று சொல்கிறாய்.? நான் உனக்கு அன்ரி இல்லை என்று வனிதா சொல்லவும், அப்போ அக்கா என்று கூப்பிடுறேன் என்று பையன் பதில் சொல்லியிருக்கிறான். இதுவரைக்கும் என் பையன் வனிதாவை அக்கா என்றுதான் கூப்பிடுகிறான்.

இந்தச் சம்பவம் நடக்கும் போது என் பையனுக்கு இவர்கள் திருமணம் செய்யத் திட்டம் போட்டதெல்லாம் தெரியாது. சும்மா போயிற்று வந்தான். வீட்டில் இருந்த வனிதா பிள்ளைகளுடனும் ஜாலியாகப் பேசியிருக்கிறான். வனிதா காரில் வந்து எங்கள் வீட்டுக்கு அருகில் என் பையனை இறக்கி விட்டுவிட்டு, "அம்மாவிடம் என் வீட்டுக்கு வந்ததைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார். எதற்காக இப்படி சொல்ல வேண்டும்?

வனிதாவின் பக்கம் மூன்று பெண்கள் இருந்திருக்கிறார்கள். ஒரு பெண்ணின் முன் திருமணத்தை நடத்தியிருக்கிறார்கள். வனிதா இப்போது இதைத் திருமணம் என்று சொல்லாமல் லவ் எக்ஸ்சேன்ஜ் என்று சொல்கிறார்.. ஆனால், பார்த்தால் அப்படி தெரியவில்லை. இரண்டு பேருடன் நடந்தால்தான் அது லவ் எக்ஸ்சேன்ஜ். இது மிகவும் வெளிப்படையாக நடந்திருக்கிறது. கிறிஸ்தவ முறைப்படி திருமணம் எப்படி நடக்குமோ அதே மாதிரியேதான் நடந்திருக்கிறது. மோதிரமும் மாற்றியிருக்கிறார்கள். வனிதா தன்னுடைய குடியிருப்பில இருக்கிறவர்களை "என் திருமணத்திற்கு வாருங்கள்" என்று அழைத்திருக்கிறார். அடுத்தநாள் "எங்களுக்குக் திருமணம் நடந்துவிட்டது என்று வனிதா பேட்டியும் கொடுத்திருக்கிறார். எப்படி இது லவ் எக்ஸ்சேன்ஜ் ஆகும்?

குடும்பம் நடத்த முடியாமல் ஒரு நீச்சல் குளத்தில் வரவேற்பாளர் வேலைக்குப் போனேன். எட்டாயிரம் ரூபாய்தான் சம்பளம். திருமணம் என்ற செய்தி வெளியே வந்தவுடன், வீட்டுக்கு வந்து "உனக்கு விவாகரத்து கொடுத்துவிட்டு வனிதாவை திருமணம் செய்யப் போகிறேன்" என்று சொன்னார். கூடவே ஒரு ஆளும் இருந்தார். என்னுடைய அம்மா கோபத்தில் "என் பெண்ணுக்குக் கொடுத்த 25 சவரன் நகையும், பிள்ளைகளுக்குப் படிக்க பத்து இலட்சம் ரூபாயும் கொடுத்து விட்டுப் பண்ணிக்கொள்" என்று சொன்னார்கள். இதை



பதிவு செய்து வைத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்தில் மாமியார் சம்மதம் சொல்லிவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். இவர் திருமணம் செய்ய மாட்டார் என்று நம்பிக்கையாக இருந்தோம். அடுத்தநாள் காலையில அம்மாவும், நானும் நடந்து போய் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப் போனோம். அப்போது, விவாகரத்து வாங்காமல் திருமணம் செய்ய மாட்டேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார்.

வனிதா குடியிருப்பில் இருக்கிறவர்கள், "நீங்கள் ஒரு பொலிஸாரை அழைத்துக் கொண்டு வாருங்கள். நாங்கள் உங்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பொலிஸ் நிலையத்தில் இருந்து யாரும் எம்முடன் வரத் தயாராக வில்லை. ஊரடங்குக் காலத்தில் அனுமதி இல்லாமல் நிறைய பேரை அழைத்து இப்படியொரு திருமணம் தவறில்ல்லயா. இதுவரைக்கும் வனிதாவிடம் நான் பேசியது இல்லை. இவர்களை "குக் வித் கோமாளி" நிகழ்ச்சியில் பார்த்திருக்கேன். எங்களுக்குள்ள எந்த முன் விரோதமும் இல்லை என வருத்தப்படுகிறார் எலிசபெத்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2065

### குகந்தினி



தாய்மொழி தமிழ் என்பதைவிட மொழிகளின் தமிழ் என்று திமிருடன் சொல்வேன்

### கடம்பன்



நல்ல விடயங்களைச் செய்வதற்கு நேரம், காலம் பார்க்க வேண்டிய அவசியமில்லை

### நிகாஷ்



வாழ்க்கையில் ஜெயிக்க ஆயிரம் முறை யோசிக்கலாம், ஜெயிப்போமா என்று ஒருமுறை யோசிக்கக்கூடாது

### சிவசக்தி




யாருக்கெல்லாம் இப்படி ஊஞ்சல் ஆடியது நினைவில் இருக்கிறது

### ஹரி கிருஷ்ணா



மூன்று விதமான மனிதர்கள் தான் உண்மையைச் சொல்வர். குழந்தை, குடிகாரன், கோபத்தில் இருப்பவன்

### கிரிஷ்



உண்மை இடம், பொருள் அறிந்து கூறப்படும் விடயம் அல்ல. மனச்சாட்சிக்குப் பயந்து தன் செயல்கள் அனைத்திலும் உண்மை உருவாகுதல் வாழ்க்கையைச் சிறப்பாக்கும். மனச்சாட்சிக்குப் பயந்தாலே போதும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விவசாயிகளை உற்பத்திக்கு ஊக்குவிப்பது பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி கோட்டா சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**கிராமங்களை கட்டியெழுப்ப வேண்டுமாயின் கிராமங்களின் பொருளாதாரம் மற்றும் மக்களின் தேவைகளை அடையாளம் கண்டு வங்கிச் சேவைகளை செயற்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்துவருகை தந்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் வரை இருக்காமல் ஏற்றுமதி விவசாயத்தை அபிவிருத்தி செய்வது காலத்தின் தேவையாகுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். கைத்தொழில்கள் உருவாகுவது மட்டும் அபிவிருத்தி ஆகாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாயத்தை மையப்படுத்தி கிராமிய தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.



தேவையை மிகச் சரியாக அடையாளம் கண்டு விவசாயத்தை முன்னேற்றுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவது அரசாங்கத்தின்நோக்கமாகும். அதற்காக பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வழிமுறை குறித்து கீழ் மட்டத்திலிருந்து கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வணிக வங்கிகள் கடன்களை வழங்கும் போது உற்பத்தித்துறையை விடவும்வணிக பிரிவுக்கு அதிக கவனம் செலுத்துகின்றனர். பாரம்பரியங்களுக்குள் மட்டுப்பட்டிருக்காது விவசாயிகளை உற்பத்திக்கு ஊக்குவிப்பது பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொறுப்பாகுமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நீண்டகாலமாக தவணைக் கொடுப்பனவின் அடிப்படையில் பாரியளவு கடன்களைப் பெற்றுக்கொண்டு திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அரச வங்கிகள் வசூலிக்க வேண்டிய கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் இதன்போது தெளிவுபடுத்தினார். (ஜ-2)

# தபால் ஊழியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகிறது இலங்கைத் தபால் தொழிற்சங்கங்களின் முன்னணி முறைப்பாடு

## கவனம் செலுத்தினார் பிரதமர்

(கொழும்பு)

அரச நிர்வாக இல 6/2006 சுற்றறிக்கை செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த சுற்றறிக்கைக்கமையவும் அதற்கு வெளியேயும் தபால் திணைக்களத்தினுள் மேற்கொள்ளப்படும்முறையற்ற தீர்மானங்கள் காரணமாக தபால் ஊழியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக இலங்கை தபால் தொழிற்சங்கங்களின் முன்னணி தெரிவித்துள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே முன்னணி இதனை தெரிவித்துள்ளது.

அந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்குவதற்காக புதிய சேவை அரசியலமைப்பு ஒன்று தயாரிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததனைத் தொடர்ந்து அதனை செயற்படுத்தவில்லை என இலங்கை தபால் தொழிற்சங்கங்களின்முன்னணி, பிரதமருக்கு சுட்டிக்காட்டியது.

இலங்கைத் தபால் தொழிற்சங்கங்களின் முன்னணி சுட்டிக்காட்டிய சிக்கல்கள் தொடர்பில் அமைச்சரவையுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.(ஜ-2-8)

# 91 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 3 நாடுகளில் சிக்கியிருந்த 91 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் 4 விசேட விமானங்கள் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதனடிப்படையில் முதலாவது விமானத்தில் கட்டாரில் சிக்கியிருந்த 21 பேர் வருகை தந்துள்ளனர்.

அத்துடன் மாலைதீவில் சிக்கியிருந்த இலங்கையர்களுடன் இரு விமானங்கள் வருகை தந்துள்ளதுடன் அதில் முதல் விமானத்தில் 61 பேரும் இரண்டாவது விமானத்தில் 8 பேரும் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை அபுதாபியில் இருந்து வருகை தந்த மற்றுமொரு விமானத்தில் ஒருவர் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். (ஜ-4)

# வடக்கு வீதி இணைப்புத் திட்டத்தின் கடன் தொகைக்கான காலம் நீடிப்பு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின்நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வடக்கு வீதி இணைப்புத் திட்ட நிர்மாணப் பணிகளுக்கான கடன் தொகை செல்லுபடியான காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இக் கடன் தொகைக்கான காலம் 2020 ஜூன் மாதம் 30 ஆம் திகதியாக இருந்த நிலையில் 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் வடக்கு வீதி இணைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய பெருந்தெருக்கள் மற்றும் மாகாண வீதி புனரமைப்பு மற்றும் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பாலங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 98 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# செய்தித்துளிகள்

## குளவிக்கொட்டுக்கு இலக்கான தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில், 13 தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம், மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுமஸ்கெலியா தோட்டத்தின் லங்கா பிரிவில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த 13 தொழிலாளர்களை, கலைந்து வந்த குளவிகள் கொட்டியுள்ளன. இந்நிலையில், குளவிகள் கொட்டுக்கு இலக்காகிய தொழிலாளர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த மாதங்களிலும் இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், பலரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எவரும் முன்வருவதில்லையென வைத்தியசாலையில் அனுமதியாகியுள்ள தொழிலாளர்கள் குற்றம் சாட்டியதுடன் உரிய அதிகாரிகள் குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (ஜ-4)

## மேலும் 29 கடற்படை வீரர்கள் பூரண குணம்

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் 29 கடற்படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் பின் குறித்த வைரஸ் அவர்களின் உடலில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்படி, இந்த நபர்கள் உட்பட 877 கடற்படை வீரர்கள் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.


வெளியேறிய கடற்படை வீரர்கள் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மேலும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்த கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது. (ஜ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 160 | 250 |
| தக்காளி | 200 | 200 | 170 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 120 | 80 |
| கோவா | 150 | 130 | 120 | 120 |
| கரட் | 140 | 170 | 170 | 200 |
| பூசணி | 40 | 35 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 120 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 220 | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 220 | 200 | 180 | 160 |
| லீக்ஸ் | 160 | 150 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 130 | 110 | 120 |
| கறிமிளகாய் | 80 | 200 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 250 | 250 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 35-60 | 40-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 220 | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 50 |




# எலுமிச்சம்பழத்தின் ஆசை



ஒரு பெரிய தோட்டம் இருந்தது. அந்த தோட்டத்தில் ஏராளமான காய்கறிகள்,பழங்கள் காய்த்து இருந்தன. ஒரு பக்கம் கத்தரிக்காய் கோவா, தக்காளி, பாகற்காய், போன்றவைகளும் மறு புறம் ஆங்கில வகை காய் கறிகளான பீற்றூட், நூல் கோல், கோலி பிளவர் போன்ற காய்கறிகளும் பயிரிடப்பட்டிருந்தன. இன்னொரு பக்கம் அன் னாசி, எலுமிச்சை,பிளம்ஸ், போன்ற பழவகைகளும் பயிரிடப்பட்டிருந்தன.

தினமும் ஆட்கள் அந்த தோட்டத்துக்குள் வந்து காய்கறிகளையும், பழங்களையும், பறித்து வண்டியில் எடுத்து சந்தைக்கு கொண்டு செல்வர்.ஒரு நாள் காய்கறிகள் அனைத்தும் ஏற்றப்பட்டு விட்டன. பழச் செடிகள் வரிசையில் இருந்த எலுமிச்சை செடிகளில் எலுமிச்சை பழம் நன்கு பழுத்து மஞ்சள் கலராய் பார்ப்பதற்கு அழகாய் இருந்தது.

அதில் இருந்த ஒரு எலுமிச்சைப்பழம் தானும் வெளியே போக வேண்டும், எப்படியும் தன்னை வண்டியில் ஏற்றுவார்கள் என எதிர்பார்த்திருந்தது. கடைசி வரை வண்டியில் ஏற்றாததால் ஏமாற்றத்தில் அதன் நிறம் கூட மங்கலானது போல தெரிந்தது.

வண்டி புறப்படப் போகும் போது தான் கவனித்தார்கள், அட.. எலுமிச்சை பறிக்கவே இல்லையே, பாருங்க எப்படி பழுத்து இருக்கிறது என்று, சொல்லி வண்டியை நிறுத்தி விட்டு எலுமிச்சைப்பழம் பறிக்க ஆரம்பித்தார்கள்.

அந்த எலுமிச்சைக்கு ஒரே சந்தோசம், பார்த்தீர்களா? எப்படியும் என்னை ஏற்றி விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே, அதே போல ஆகிவிட்டதல்லவா, மற்ற எலுமிச்சம் பழங்களிடம்சொல்லி சந்தோசப்பட்டுக் கொண்டது.

சந்தையில் அனைத்து காய்கறிகள்,பழங்கள் இறக்கப்பட்டன. எலுமிச்சம் பழங்கள் கொண்ட மூட்டை இறக்கப்பட்டவுடன் அந்த எலுமிச்சைக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. எவ்வளவு பெரிய சந்தை. எல்லாத் தோட்டத்தில் இருந்தும் பழங்கள் வந்திருந்தது. பக்கத்து மூட்டையில் இருந்த ஒரு எலுமிச்சையுடன் பேச்சுக் கொடுத்தது.

அண்ணா நீங்க எந்த தோட்டத்தில் இருந்து வருகிறீர்கள்? நாங்கள் மேட்டுப்பாளையத்தில் இருந்து வருகிறோம். அப்படியா அந்த ஊர் எங்கு இருக்கிறது? அந்த எலுமிச்சை. கொஞ்சம் யோசித்து எனக்கு சரியாகத் தெரியவில்லை, எங்களை இன்றைக்கு காலையில்தான் செடியில் இருந்து வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். அப்படியா, எங்களையும் இன்றைக்குத்தான் ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

பேசிக்கொண்டிருக்கும்போதே அந்த மூட்டையை ஒரு ஆள் தலைமீது ஏற்றிக்கொண்டு சென்றார். அந்த மூட்டையை எடை பார்க்கும் இயந்திரத்தில் வைக்கப்பட்டு ஐம்பது கிலோ இருக்கு, சொல்லி ஒரு சீட்டை எழுதிக்கொண்டு வந்த ஆளிடம் கொடுத்தார்கள்.

அவர் அந்த மூட்டையை மீண்டும் தலையில் ஏற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். உள்ளிருந்த அந்த எலுமிச்சைக்கு ஆடி ஆடி செல்வது சந்தோசமாய் இருந்தது. மற்ற நண்பர்களிடம் பார்த்தீர்களா? என்ன ஒரு ஆட்டம், சொல்லிவிட்டு கல கல வென சிரித்தது.. அந்த மூட்டை சிறிது நேரத்தில் ஒரு இடத்தில் இறக்கப்பட்டது. மீண்டும் அந்த மூட்டை பிரிக்கப்பட்டு பழங்கள் ரகம் வாரியாக பிரிக்கப்பட்டன.

இந்த எலுமிச்சம்பழம் தன்னை எப்படியும் நல்ல இடத்தில் பிரித்து வைப்பார்கள் என எதிர்பார்த்தது. அதேபோல் அந்த பழம் நல்ல ரகமாக சேர்க்கப்பட்டு, கடையில் அனைவரும் பார்க்கும் இடத்தில் வைக்கப்பட்டது. தனக்குள்ளேயே பேசிக் கொண்டது எலுமிச்சை, என்னுடைய கலரையும் உருவத்தையும், பார்த்தாலேயே யாராவது ஒருவர் எடுத்துக் கொள்வார்கள் என்று எனக்கு தெரியுமே.

இப்பொழுது ஒரு பெண் தன்னை எடுத்து பார்ப்பதை பார்த்த எலுமிச்சைக்கு மீண்டும் ஒரு மகிழ்ச்சி, எப்படியும் என்னை எடுத்து தன் பைக்குள் போட்டுக் கொள்வாள் என்று எதிர்பார்த்தது.அந்தோ பரிதாபம், இந்தப்பழம் எவ்வளவு விலை? என்று கேட்க, ஒரு பழம் ஐந்து ரூபா. ரொம்ப அதிகமாக சொல்கிறாயா என்று சொல்லி விட்டு அடுத்த ரகத்தை பார்த்து இது என்ன விலை?. என்று கேட்க, அது ஒரு பழம் இரண்டு ரூபா, சரி அதிலேயே இரண்டு கொடுத்துவிடு., அந்த அம்மா சொல்லி விட்டு கையில் இருந்து காசை கொடுத்துவிட்டு அந்தப் பழங்களை தன் பைக்குள் போட்டுக்கொண்டாள்.

சே, நோஞ்சானாய் இருக்கும் அவனுக்கு வந்த வாழ்க்கையைப் பார், தனக்குள் அலுத்துக் கொண்டது. அன்று முழுக்க, அந்த எலுமிச்சையை யாரும் எடுக்கவே இல்லை. மறுநாள் சற்று சுருக்கம் விழுந்து விட்ட தன் உடம்பை பார்த்து மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டது. நேற்று எவ்வளவு அழகாய் இருந்தோம், இன்று இப்படி ஆகி விட்டோமே, என்று வருத்தப் பட்டது. அன்றும் அதனை யாரும் எடுத்துச் செல்லவில்லை. பேசாமல் நமது செடியிலேயே இருந்திருக்கலாம், இப்படி அநியாயமாய் வெளியில் வந்து வெயிலிலே வாடிப் போய்விட்டோமே என்று அதற்கு கவலை தொற்றிக் கொண்டது. நாம் இப்படியே இருந்து காய்ந்து விடுவோமா?

நான்காம் நாள் அந்தப் பழத்தைக் கையில் எடுத்த பெண் இந்த பழம் என்ன விலை? என்று கேட்க, அம்மா இந்த பழம் இரண்டு ரூபா, சொன்னவரிடம், நான்கு நாளைக்கு முன் னால் இந்தப் பழம்ஐந்து ரூபாய் என்று சொன்னாய். ஆமாம், அப்போது நன்றாகப் பக்குவமாக இருந்தது. இப்போது வெயிலிலே கொஞ்சம் வாடிப் போய் விட்டது அதுதான்.

சொன்னவரிடம் மறு பேச்சு பேசாமல் அந்த பெண் காசை கொடுத்து விட்டு தன் பையில் போட்டுச் சென்றாள். இப்பொழுது தான் ஏதோ குளிரூட்டப்பட்ட பெட்டிக்குள் இருப்பது தெரிந்தது. அந்த வெயிலுக்கு இந்த அறை பரவாயில்லை, நினைத்துக்கொண்ட அடுத்த நிமிடம் பெண்ணின் கரம் ஒன்று தன்னை எடுத்துப்பார்த்து கையில் உருட்டுவதை உணர்ந்தது.

ஆஹா..ரொம்ப சந்தோசமாக அனுபவித்தது. சட்டென தன்னை அறுப்பதை உணர்ந்தது, அதற்கு வலி தெரியவில்லை. ஏதோ குழலுக்குள் வைத்து திருகுவது கூட அதற்கு கிச்சு கிச்சு மூட்டுவது போல் இருந்தது. அப்புறம் தன்னை பிழிய பிழிய ஆனந்தமாய் நீரை உதிர்த்தது. பாட்டி உங்கள் எலுமிச்சை ஜுஸ் பிரமாதம், நன்கு ருசியாகவும் வெயிலுக்கு இதமாவும் இருந்தது. நான்கைந்து குழந்தைகள், தங்கள் வாயை துடைத்துக்கொண்டு அந்த பெண்ணிடம் சொல்லிக் கொண்டிருப்பதை மகிழ்ச்சியுடன் பார்த்து கொண்டிருந்தது. பிழியப்பட்டு வெற்றுத்தோலான அந்த எலுமிச்சை பழம்.


## சொற்களைக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | E | A | D | P | H | O | N | E | S |
| N | H | B | O | M | H | S | L | S | P |
| E | A | O | H | W | I | N | D | O | W |
| C | C | H | U | A | W | O | B | L | M |
| K | N | C | M | S | H | B | R | Z | S |
| L | R | H | L | K | E | H | O | H | H |
| A | H | A | M | M | E | R | H | W | Z |
| C | Z | I | H | T | A | B | L | E | L |
| E | F | R | P | E | N | C | I | L | S |
| T | W | H | C | A | R | P | E | T | H |





- ~~HOUSE~~
- HAMMER
- WINDOW
- BOWL
- NECKLACE
- CARPET
- HEADPHONES
- TABLE

## வர்ணத்தின் மூலம் உருவைக் கண்டுபிடியுங்கள்



## வரைந்து பழகுவோம்





உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ அவற்றையே மனத்தில் இருத்துங்கள். ~ பிலிப்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனவாதத் தீயை மூட்டும் எல்லாவல மேதானந்த தேரர்

மகாவம்சத்தை எழுதியவர் மகாநாம தேரர். மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரர் அது எழுதப்பட்டதன் நோக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மகாவம்சத்தை வரலாற்று ஆதாரமாகக் கொள்வதற்கு சிங்களப் பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கிறது.

மகாவம்சம் நிதர்சனமானதா? எனக் கேள்வி கேட்பதற்கு எவரும் இல்லாத நிலையில், மகாவம்சமே வரலாற்று ஆவணம் என்று பிரகடனப்படுகிறது.

பரவாயில்லை, ஓர் இனம் தனது வரலாற்று ஆவணம் என்று புகழ்ந்தேத்துகின்ற ஒரு நூலை விமர்சிப்பது அவ்வளவு நல்லதல்ல என்று எண்ணி அது பற்றி ஏனையவர்கள் பேசாமல் இருந்தால், எல்லாவல மேதானந்த தேரர் போன்றவர்கள் தமிழ் மக்களின் வரலாற்றை வேரறுக்கும் வகையில் அறிக்கை விடுகின்றனர்.

இதைப் பார்க்கும்போது மகாவம்சத்தின் உண்மைத் தன்மையை உரசிப் பார்க்க வேண்டும் எனத் தமிழ்ப் புத்திஜீவிகள் கோர வேண்டிய தேவை ஏற்படுகிறது.

ஆம், மகாவம்சத்தின் தொடக்கம் ஒரு சிங்கத்துக்கு ஒரு மானிடக் குழந்தை பிறந்ததாக எழுதப்படுகிறது.

சிங்கத்துடன் மானுடம் குடும்பம் நடத்துவது சாத்தியமானதா? அந்த சாத்தியமற்ற விடயத்தைத் தாண்டி சிங்கத்துக்கும் மனிதத்துக்கும் மானிடக் குழந்தை பிறக்க முடியுமா? இவையெல்லாம் விஞ்ஞான ரீதியில் ஏற்புடையவையா என்ற கேள்விகள் எழும்போது மகாவம்சம் மீள் வாசிப்புக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனை எழும்.

ஆக, ஆதாரமாற்ற வரலாற்றை தம் இடுப்பில் செருகி வைத்துக் கொண்டு, இராவணேஸ்வரன் என்ற இலங்கை வேந்தன் இந்த நாட்டை ஆண்டான் என்ற கதை கற்பனையானது என எல்லாவல மேதானந்த தேரர் கூறுவது அடிப்படை நியாயமற்றது.

பௌத்தபிரானின் போதனைகளைப் பின்பற்ற வேண்டிய ஒரு தேரர்; சிங்கள இனம் சார்ந்து நின்று கொண்டு, தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் கருத்துரைப்பது மாபெரும் துரோகத்தனமாகும்.

இலங்கை மண்ணை இராவணேஸ்வரன் ஆண்டான் என்பதை சிங்கள வரலாற்று பேராசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், எல்லாவல மேதானந்த தேரர் இராவணேஸ்வரன் இலங்கையை ஆளவில்லை எனக் கூறுவது பேரினவாதத் தீயை மீண்டும் இந்த நாட்டில் எரிய விடுவதற்கானதாகும்.

எனவே இத்தகைய இனவாதிகளைக் கொண்ட தொல்லியல் சார்ந்த ஜனாதிபதி செயலணியின் உள்நோக்கம் தமிழ் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தவே செய்யும்.

# கொழும்பில் ரணில் அதிக வாக்குகளைப் பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகத்தயார்

## சுஜீவ சேனசிங்க திட்டவட்டம்

(கொழும்பு)

**கொழும்பில் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியைவிட அதிக வாக்குகளைப் பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகத் தயாராகவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய சொத்துக்களை விற்று முடித்து, தற்போது கிரிக்கெட்டையும் நாட்டின் சிறந்த வீரர்களையும் அரசியல் நோககங்களுக்காக காட்டிக் கொடுக்கின்றனர்.

2011ஆம்ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதை மகிந்தானந்த அளுத்கமகே அறிந்திருந்தால் அதனை ஏன் அப்போதே வெளிப்படுத்தவில்லை?

இவ்வாறு ஒவ்வொரு பிரிவாக நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும்.

வாக்களிக்கும்போது மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் இதே நிலைமையிலேயே காணப்படுகிறது. அதனால்தான் 26 வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் மக்களால் புறக்கணிக்கப்பட்டார்.

இம்முறை கொழும்பில் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியைவிட அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் அல்லது தயா கமகே கூறியதைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சி 50 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராகவுள்ளேன்" என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# பிரான்ஸ் பிரதமர் பதவி துறந்தார்

(பாரிஸ்)

பிரான்ஸ் பிரதமர் எத்துவார் பிலிப் (**Edouard Philippe**) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அரசாங்கத்திற்கு மூன்று ஆண்டுகள் தலைமை தாங்கிய பின்னர் தனது இராஜினாமா கடிதத்தை, நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் ஏற்றுக்கொண்டதாக, எலிசே மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பலாலி வீதி வேம்படி சந்தியிலிருந்து முலவை சந்தி வரை, புகையிரத நிலைய வீதி, மார்டின்வீதி, யாழ் 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள், கிறீன் கிறாஸ் விடுதி, யாழ்.புகையிரத நிலையம், **Dan** தொலைக் காட்சி நிலையம், ஹோட்டல் **North GATE,** திருநெல்வேலி சந்தையிலிருந்து இராமலிங்கம் சந்தி பிரதேசம், கரணவாய், நாவலம்டம், தூதாவளை, நெல்லியடி, கரவெட்டி, சக்களாவத்தை, இரும்பு மதவடி, வதிரி, திக்கம், மனோகரா, சித்தி விநாயகர் கோவிலடி பிரதேசம், தேவரையாளி, உடுப்பிட்டி, நெல்லியடி பொலிஸ நிலையம், நெல்லியடி சந்தை, றூபின்ஸ் வைத்தியசாலை, நெல்லியடி கார்கில்ஸ் பூட் சிற்றி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், இலங்கை வங்கி நெல்லியடி, மந்திகை அம்மன் கோவிலடி, சாரையடி, கிராமக்கோடு, தம்பசிட்டி, சாளம்பை, பருத்தித்துறை **VM** வீதி முதலாவது சந்தி, பருத்தித்துறை கல்லூரி வீதி, பருத்தித்துறை **C.T.B** பிரதேசம், பருத்தித்துறை சந்தை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 10 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமனனார் **Palmyrah house,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, **Palmyrah house** கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, **New Silk Road,** தோட்டவெளி, **Timex** ஆடைத் தொழிற்சாலை, **Industrial Estate,** மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மேலும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை துருக்கி நகரம் தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நற்செயல்கள் அனைத்தும் இறுதியில் பலன் அளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை. -காந்தியடிகள்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மீக ஞானம்




ஆன்மீக ஞானம் ஒன்றினால் மட்டுமே நமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்க முடியும். மற்ற எல்லா அறிவும் நமது தேவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே நீக்கும். தேவைகளை எழுப்புகின்ற மூலகாரணத்தை ஆன்ம ஞானத்தால் மட்டுமே முற்றிலுமாக வேரறுக்க முடியும்.


எனவே ஒருவனுக்கு அளிக்க முடிந்த உதவிகள் அனைத்திலும் ஆன்மீக உதவியே தலைசிறந்தது. ஆன்மீக ஞானத்தைத் தருபவனே மனித குலத்திற்கு மிகச்சிறந்த நன்மை செய்பவன். அவ்வாறு மனிதனுக்கு ஆன்மீக உதவி செய்துள்ளவர்களையே மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர்களாக எந்தக் காலத்திலும் நாம் காண்கிறோம்.

ஏனென்றால் வாழ்வின் நமது செயற்பாடுகள் அனைத்திற்கும் உண்மையான அடிப்படை ஆன்மீகமே. ஆன்மீக வலிமையும்ஆன்மீக நிறைவும் உடைய ஒருவன் அவன் விரும்புவான் என்றால் எல்லாத் துறைகளிலும் பேராற்றல் பெற்றவனாகவே விளங்க முடியும்.

ஆன்மீக வலிமை இல்லாமல் ஒருவனால் தன் பௌதீகத் தேவைகளைக்கூடச் சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

# பிரான்ஸ் சர்வதேச கிரிக்கெட் அணியில் ஈழத்தமிழர்கள் மூவருக்கு இடம்





பிரான்ஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கான 25 வீரர்கள் கொண்ட அணியில் 6 தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பிரான்ஸ் கிரிக்கெட் சம்மேளனத்தினால் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட இந்த 25பேர் கொண்ட பட்டியலில் ஈழத்தை சேர்ந்த திலீப் பாலசுப்பிரமணியம், சுவேந்திரன் சந்திரகுமாரன் ,அலிஸ்டின் ஜோன்மாரி ஆகியோரும் தமிழகத்தை சேர்ந்த தயாநிதி பெனுய்ட், மஹதீர் அப்துல் ரகுமான், முகமட் முகைதீன் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர். மேலும் யுத்தம் நிறைவுற்று ஒரு தசாப்த காலமாகியும் இலங்கையிலே ஈழத் தமிழர்களுக்கு இடம்கொடுக்காத நிலையில் புலம்பெயர் பிரதேசங்களில் ஈழத்தமிழர்களுக்கு விளையாட்டுத்துறையில் அங்கீகாரம் கொடுத்தமை பெருமையடையும் விடயமாகும்.

இந்நிலையில் தெரிவு செய்யப்பட்ட தமிழர்களுக்கு சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (ஜ-4)

## நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளர் இராஜினாமா

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளர் பீட்டர் புல்டன், தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

2017ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற புல்டன், சமீபகாலமாக நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராகப் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் கேண்டர்பரி அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளதால் அவர், துடுப்பாட்ட பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.

பதவியிலிருந்து விலகியமை குறித்து அவர் தெரிவிக்கையில், 'நியூசிலாந்து அணியுடனான என்னுடைய உறவு அற்புதமாக இருந்தது.

இருந்தாலும் தலைமைப் பயிற்சியாளர் பதவியையே நான் எப்போதும் விரும்பினேன். கேண்டர்பரி அணியில் உள்ள பல வீரர்கள் சர்வதேச போட்டிகளில் விளையாடத் தகுதி கொண்டவர்கள். அவர்களின் முன்னேற்றத்துக்கு நான் உதவ வேண்டும் என கூறினார்.

41 வயதான பீட்டர்புல்டன், 49 ஒருநாள். 23 டெஸ்ட் மற்றும் 12 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வீரர்கள் தரப்பில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெறவில்லை

### விசாரணைப்பிரிவு அறிவிப்பு

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வீரர்கள் தரப்பில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எந்தவொரு கிரிக்கெட் வீரர்களும் விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் அளிக்கத் தேவையில்லை என இது குறித்து ஆராயும் விசேட விசாரணைப் பிரிவின் தலைவர் அறிவித்துள்ளார். இதேவேளை, இந்த ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க, இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா ஆகியோர் விளையாட்டு குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-4)

## ஆசியக் கோப்பை காற்பந்து; இந்தியா உட்பட 5 நாடுகள் ஆர்வம்



ஆசியக் கோப்பை காற்பந்து போட்டி 4 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. 2027ஆம் ஆண்டுக்குரிய 19ஆவது ஆசியக் கோப்பை காற்பந்து போட்டியை நடத்தும் உரிமத்தைப் பெற இந்தியா, சவுதிஅரேபியா, கட்டார், ஈரான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 5 நாடுகள் போட்டியிடுகின்றன. இந்தியா இதுவரை இந்த போட்டியை நடத்தியதும் இல்லை. கோப்பையை வென்றதும் இல்லை.

5 நாடுகள் ஆர்வம் காட்டுவதை வரவேற்றுள்ள ஆசிய காற்பந்து கூட்டமைப்பு. 19 ஆவது ஆசியக் கோப்பை போட்டியை நடத்தும் வாய்ப்பு யாருக்கு வழங்கப்படும் என்பது அடுத்த ஆண்டு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## ஓகஸ்ட் இல் இருபது-20 நடத்த இலங்கை திட்டம்



ஐந்து அணிகள் கலந்து கொள்ளும் இருபது-20 கிரிக்கெட் லீக்கை அடுத்த மாதம் ஓகஸ்டில் நடத்த இலங்கை கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியம் ஐபிஎல் இருபது-20 லீக்கை நடத்துவதுபோல் அவுஸ்திரேலியா பிக்பாஷ், பாகிஸ்தான் பாகிஸ்தான் சுப்பர் லீக். வெஸ்ட் இண்டீஸ் கரீபியன் பிரீமியர் லீக் என ஒவ்வொரு நாடுகளும் நடத்தி வருகின்றன.

அதேபோல் இலங்கை அணி முதன்முறையாக இந்த வருடம் இருபது-20 லீக்கை அறிமுகப் படுத்த திட்டமிட்டிருந்தது. ஆனால் கொரோனா வைரஸ் தொற்றால் நாட்டின் எல்லை மூடப்பட்டதால் அந்தத் திட்டம் தள்ளிப் போனது.

தற்போது இலங்கையில் கொரோனாத் தாக்கம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது

இதனால் ஓகஸ்ட் 8 லிருந்து 22 வரை ஐந்து அணிகள் பங்கேற்கும் இருபது-20 லீக் தொடரை நடத்த திட்டமிட்டுள்ளது. அதிகபட்சமாக ஒவ்வொரு அணிகளும் 6 வெளிநாட்டு வீரர்களை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும் இலங்கை அரசு ஓகஸ்ட் முதலாம்திகதி வரை சர்வதேச எல்லையை மூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## உலக செஸ் சம்பியன்ஷிப் அடுத்தாண்டுக்கு தள்ளிவைப்பு



கொரோனா வைரஸ்தொற்று அச்சுறுத்தல் காரணமாக கண்டிடேட்ஸ் போட்டி முழுமையாக நடைபெறாததால் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியை டிசெம்பர் மாதம் டுபாயில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தாக்கம் காரணமாக உலக செஸ் போட்டி அடுத்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதென சர்வதேச செஸ் சம்மேளன தலைவர் அர்காடி டிவோர்கோவிச் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

டுபாய் எக்ஸ்போ நடைபெறும் காலத்தில் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியை டிசெம்பரில் நடத்த திட்டமிட்டிருந்தோம்.

ஆனால் டுபாய் எக்ஸ்போ அடுத்தாண்டு ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதாலும், கண்டிடேட்ஸ் போட்டி முழுமையாக நடைபெறாததாலும் உலக செஸ் போட்டி அடுத்தாண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-2-4)

## நயினைத் தாயின்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மனின் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 5.30 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து காலை 6.45 மணியளவில் சித்திரத் தேருக்கு அம்பிகை, விநாயகர், வள்ளி - தெய்வயானை சமேத முருகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் எழுந்தருளினர்.

கொரோனா நோய் நிலைமையைக் கருத்திற் கொண்டு பல்வேறு சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் இம்முறை நாகபூஷணி ஆலய தேர்த் திருவிழா இடம்பெற்றது.

நயினாதீவுப் பகுதியைச் சேர்ந்த அடியவர்கள் மாத்திரம் தேர்த் திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன், வெளியூர்கள்ளச் சேர்ந்த அடியவர்கள் அனுமதிக்கப்படவில்லை. (ம-3,18)

## மண்டைதீவு...

பற்றப்பட்டுள்ளது.

அநாமதேயமாக நின்ற படகினை சோதனை செய்த போதே, பொதிகள் செய்யப்பட்ட நிலையில், 421 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் மணியம்தோட்டத்தினைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சாவினை நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,32,60,101,114)

## ரணிலிடம்...

சிங்கவிடம் 4 மணி நேரம் இடம்பெற்ற விசாரணையின் பின்னர் அவர்கள் வெளியேறியுள்ளனர்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெறவே, குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சிலர் அங்கு சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்து கொள்ளுமாறு, சட்டமா அதிபரினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஆட்ட நிர்ணயத்...

என சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

2011 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவினரால கடந்த 30ஆம் திகதியன்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பாக இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரான குமார் சங்கக்கார மற்றும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க, அப்போதைய இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வா உள்ளிட்டோர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றதற்கான ஆதாரமில்லை என ஐசிசி தெரிவித்துள்ளது. (ம-3)

## அழுத்தங்...

மற்றும் பல்வேறு சட்டவிரோத குற்றச் செயல்கள் பாரியளவில் இடம்பெறும் நிலையில் அதற்கு அந்தந்த மாகாணத்துக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகள்தான் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட பொலிஸ்துறை உயர் அதிகாரிகள் மத்தியில் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

குற்றச் செயல்களைத் தடுக்க முடியாமல் போனால் அதிகாரிகள் தாம் சீருடை அணிவதற்கும் வெட்கப்பட வேண்டும். எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது தமது சீருடையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவது முக்கியமாகும்.

சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம். அவ்வாறான தவறுகளுக்கான பொறுப்புக் கூறலிலிருந்து அந்தந்த மாகாணங்களின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வரையான சகலரும் சுலபமாக நழுவிவிட முடியாது.

மாறாக இம்மாகாணங்களில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான பொறுப்பை அவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமது கடமைகளை ஏனைய தொழில்கள் போல் கணக்கெடுக்காமல் நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை உங்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படுவது மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வெற்றி பெற்றா...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தற்போது மத வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் பெருமளவில் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தேர்தல் சட்டங்களுக்கு முற்றிலும் முரணானது. 1981ஆம் ஆண்டு முதலாம் பிரிவுத் தேர்தல் சட்டத்துக்கமைய இது தவறானதாகும்.

ஆகவே சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் வெற்றி பெற்றாலும் அவர்களின் வாக்குகள் இரத்துச் செய்யப்படும் என்று கடுமையாக எச்சரிக்கின்றோம்.

இதேவேளை முன்னாள் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சிலர் தற்போது அரச வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர் என்று அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சியின் வேட்பாளர்களே அது குறித்து முறையிடுகின்றனர்.

அதேபோல் அமைச்சரவையில் உள்ள சிலரும் இவ்வாறு அரச வாகனங்களைப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

ஆகவே அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். அது பெரிய தேர்தல் விதி மீறல் ஆகும்.

தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எந்த அடிப்படைக் காரணங்களுமின்றி இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சந்தேகங்கள் இருந்தால் ஆணைக்குழுவில் முன்வைக்க முடியும் என்றார். (ம-3)

## சந்தேக நபர்...

செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

70 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் பொலிஸாருக்கு தெரியாமல் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். (ம-3,18,32)

## விசாரணைகள்...

கிண்ண இறுதியாட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி இடம் பெற்றதாக, முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டியிருந்தார். இது தொடர்பாக, விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவில் நடைபெற்று வந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த உலகக்கிண்ண இறுதிப்போட்டியில ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றமைக்கான போதுமான ஆதாரங்கள் இல்லை எனபதனால் விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கடத்தல்காரர்...

போதைப்பொருள் மீட்கப்பட்ட நிலையில் அதன் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு எனத் தெரிவித்து 174.6 கிலோ கிராம் கஞ்சாவை கடத்திச் சென்று விற்பனை செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

வல்வெட்டித்துறை சின்னமலை ஏற்றம் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை 25 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் பொதிகள் இரண்டு சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் இந்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விசாரணையை முன்னெடுத்தனர்.

அதன் போது இந்த கஞ்சா பொதிகள் மீட்பின் பின்னணியில் 174.6 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கடத்தல் காரர்களிடமிருந்து மிரட்டிப் பெறப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தொண்டைமானாறைச் சேர்ந்த ஒருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. (ம-3)

## கொரோனா...

பாலச்சந்திரன் அஜந்தன் (வயது-40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றிற்கு இலக்கான நிலையில் சுமார் ஒரு மாதமாக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-3)


தன நிதானய
திகதி - 2020.07.03
சீட்டிழுப்பு இலக்கம் - 286
I 63 76 02 55
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2020/07/03
சீட்டிழுப்பு இலக்கம் 4172
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 3 6 7 0 5 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2467
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Y 26 43 50 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 541
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
D 16 11 65 73 79

சංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 346 | திகதி 03.07.2020 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் 09 20 29 | விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54,952,156
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2850 | வர்ணம் கருநீலம் | திகதி 03.07.2020
வெற்றி இலக்கங்கள் 22 40 51 53 மேடம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,333,002
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

லக்ன வாசனா
சீட்டிழுப்பு வாரம் 593 | பச்சை | 03.07 2020
R 26 36 45 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,311,720
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 969
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.07.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,337,560/-
வெற்றி இலக்கங்கள் 16 31 41 69 | ஆங்கில எழுத்து P

## வெல்டிங் வேலையாட்கள் தேவை

NTS வெல்டிங் தொழிலகத்திற்கு இரும்பு, சில்வர் வெல்டிங் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் உடன் தேவை.

(3183)

தொடர்புகளுக்கு :-
இல. 403, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
076 089 3701


# வவுனியாவில் நாய் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியிலுள்ள கிராம அலுவலர் ஒருவர் தனது வீட்டிற் குள் புகுந்த பக்கத்து வீட்டு உறவினரின் வளர்ப்பு நாய் மீது துப்பாக்கிச் சூடு மேற் கொண்டதில் சம்பவ இடத்தில் நாய் துடிதுடித்து உயிரிழந்துவிட்டதாக வளர்ப்பு நாய் உரிமையாளர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற் கொண்டுள்ளார் .

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில் ,

நேற்று பிற்பகல் வவுனியா செட்டிகுளம் கங்கன்குளம் 2 ஆம் பாம் வீதியிலுள்ள கிராம அலுவலரின் வீட்டிற்குள் புகுந்த பக்கத்துவீட்டு உறவினரின் நாய் மீது குறிவைத்து குரங்குகள் சுடும் துப்பாக்கி யைப் பயன்படுத்தி சூடு மேற்கொண்டுள்ளார்.

இதனால் குறித்த நாய்க்கு வலி ப்பு ஏற்பட்டு சம்பவ இடத் தில் துடிதுடித்து உயிரி ழந்துவிட்டது.

குறித்த கிராம அலுவலரிடம் குரங்கு சுடும் துப்பாக்கி வைத்திருப்பதாகவும் அதனைப் பயன்படுத்தி நாய் மீது சூடு நடாத்தியுள்ளதாக வளர்ப்பு நாயின் உரிமையாளர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுள்ளார் .

(ம-3,299)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி அருகில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடத்தில் சமையல் வசதி, பிறிச், ரீவி போன்றவற்றுடனும் தளபாட வசதிகளுடனும் கூடிய அனைக்ஸ் மற்றும் தளபாட வசதி கொண்ட அறைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 105 6694 (3196)


# உரும்பிராயில் விபத்து ஒருவர் படுகாயம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் நேற்று பிற்பகல், இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஒன்றும், முச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18)


## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் 08 வருடங்களாக விளம்பரப்படுத்தல் துறையில் முன்னணி வகிக்கும் NGC நிறுவனத்தில் 4 பதவி வெற்றிடங்களுக்கான வேலையாட்கள் தேவை. O/L, A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு (C-9828)
077 283 7638 / 021 790 4574 / 021 439 4574


# மரண அறிவித்தல்



பிறப்பு 10 - 08 - 1946

இறப்பு 03 - 07 - 2020

## சின்னவன் தம்பிராசா

புத்தூர் கிழக்கு, விக்னேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும் சர்வோதய வீதி, ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் தம்பிராசா அவர்கள் நேற்று (03.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் - செம்பி தம்பதியினரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கமலதீபன், ரதீபன் (கனடா), நகுலதீபன், கார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (04.07.2020) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

( 3192 )

சர்வோதய வீதி,
ஆவரங்கால்.

(3192)

தகவல் :
குடும்பத்தினர்


## ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்

அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (3175)

யாழ்ப்பாணம்
T.P : 077 658 9443

## காணி விற்பனைக்கு

அராலி மேற்குப் பகுதியில் 10 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : (3195)
077 663 1742

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240

## தேவை

மேசன் வேலை தெரிந்தவர்கள் மற்றும் Tiles பதிக்கும் வேலை தெரிந்தவர்கள் தேவை. நாளாந்தச் சம்பளம் வழங்கப்படும். (3196)

தொடர்பு : 077 953 0496

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

18 - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
● ஆரம்ப சம்பளம் -15'000/- (C-9829)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

## வாடகைக்கு

யாழ். நகர் (வைத்தியசாலைக்கு அண்மையில்) 2ம் குறுக்கு வீதியில் வேலை செய்யும், படிக்கும் ஆண்களுக்கேற்ற தளபாட வசதிகளுடன் சகல வசதிகளும் கொண்ட 4 அறைகள் (புதிய வீடு) வாடகைக்குண்டு. (3197)

தொடர்புக்கு : 077 325 9934

## வாடகைக்கு

சாவகச்சேரி நகரின் சந்தியில் A9 கண்டி வீதியில், மாபிள் பதிக்கப்பட்ட பிளாட் கடை (கீழ், மேல்) வாடகைக்கு உண்டு. (C-9816)

தொடர்பு : 077 536 1370



# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி





X



6
சி.வி.விக்னேஸ்வரன்

தமிழ் அரசியலுக்கு நேர்மையும் ஆற்றலும் மிகுந்த ஆளுமையை உருவாக்கும் சந்தர்ப்பம் இதுவே

10
தவச்செல்வம் சிற்பரன்
பழைய மாணவன்-யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி
(Architect மொரட்டுவ பல்கலைக்கழகம்)

தமிழினப்பற்றாளர் அவை

( C-015 )


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.